# அலை

3

பங்குனி – சித்திரை 1976

ஒரு ரூபா

## இலக்கு

நாம் அறிவெல்லைக்கு அப்பால்செல்லும்போது
அறிவுடையவராகிறோம்
அறிவே அதற்கு உதவுகிறது அறிவே தடையாகிறது
நாம் மனோ ஆற்றல்களுக்கு அப்பால் செல்லும்போது
சக்தி உடையவராகிறோம்
முயற்சியே உதவுகிறது, முயற்சியே தடையாகிறது
நாமச்தோஷிப்புகளுக்கு அப்பால் செல்லும்போது
இன்பம் பெறுகிறோம்
ஆசைதான் உதவுகிறது, ஆசையே தடையாகிறது
நாம் தனிமனிதப்படுத்தல்களுக்கு அப்பால் செல்லும்போது
உண்மை ஆளாகிறோம்.
ஆணவந்தான் உதவுகிறது, ஆணவமே தடையாகிறது
நாம் மனிதத்துவத்துக்கு அப்பால் செல்லும்போது
மனிதன் ஆகிறோம்
மிருகந்தான் உதவுகிறது, மிருகமே தடையாகிறது
அறிவை ஒழுங்குபடுத்திய உள்ளுணர்வாக்கு,
நீ முற்றிலும் ஒளியாய் இரு
இதுவே உன் இலக்கு.

—ஸ்ரீ. அரவிந்தர்

மொழிபெயர்ப்பு:
காளிதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குழு

ஐ. சண்முகன்
மு. புஷ்பராஜன்
இ. ஜீவகாருண்யன்
அ. யேசுராசா

# அலை

இல: 6, மத்திய மேற்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

ஆண்டுச் சந்தா:- ரூபா 7-00

## இலக்கிய வளர்ச்சியில் எழுத்தாளரின் பங்கு

இதுவரை ஈழத்தில் எத்தனையோ இலக்கியச் சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன. கலைச்செல்வி, தேனருவி, தமிழமுது, கனனி எனப் பல. இவை இவ்வாறு மறைந்துபோனமைக்கான காரணமாகப் பொருளாதார நெருக்கடிதான் சொல்லப்படுவதுண்டு. அதுவும் உண்மைதான். கடதாசித் தான் விலையேற்றம், அச்சுக் கூலி உயர்வு, தபாற் கட்டண உயர்வு எனப்பல கஷ்டங்களுக்குமத்தியில் சஞ்சிகையைவெளியிடவேண்டிய நிலை. இந்த நிலையைக்கூட தியாகத் தன்மையோடு, பொருளாதார இழப்புகளோடு தாண்ட முயலும்போது குறுக்கிடும் பிரச்சினைகள்தான், மிக வேடிக்கையானவையாக இருக்கின்றன. இவைகளில் முக்கியமானது, 'கிசு கிசு' என்று இலக்கியம் வளரும், தமிழகத்தை விட தரமான, சிறந்ததான இலக்கியமும், இயக்கமும் உள்ளதெனக் கூறப்படும் ஈழத்தில் பிரசுரத்துக்குகந்த, தரமான ஆக்க இலக்கியங்களும், கட்டுரைகளும் விமர்சனங்களும் கிடைக்காமையாகும்.

தரமான விடயங்கள் தாங்களாகவே சஞ்சிகையை வந்தடைவதுமில்லை. எழுதிக் கேட்கிற போது, ஒரு சிலரைத் தவிர பலர் ஒத்துழைப்புத் தருவதுமில்லை. தரமான விடயங்களுக்கே பஞ்சமாகிப் போய்விட்டது. இதனால், நிர்ப்பந்தவயமாக, தொடர்ச்சியாக, விடாது எழுதிக்கொண்டிருக்கும் ஒரு சிலருடைய படைப்புக்களையே தொடர்ந்து பிரசுரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. தொடர்ந்து அவைபிரசுரிக்கப் படவே சஞ்சிகை ஒரு பக்கம் சாய்வதாகவும், நடு நிலைமை தவறுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. எழுதாதவர்கள் எழுத்துக்களை பிரசுரிப்பது எப்படி என்றுதான் புரியவில்லை. பதினொரு வருடங்களாக சஞ்சிகை நடத்திவரும் 'முற்போக்காளர்' ஒருவர் செய்வது போல, பக்கங்களை நிரப்பும் கைங்கரியத்தைத்தான்- உண்மைஇலக்கிய வளர்ச்சி என்று இவர்கள் கருதுகிறார்களோ?

இன்னுமொன்று, ஈழத்தின் தேசிய இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக வாய்கிழியப் பேசிவரும் எழுத்தாளர் திருக்கூட்டம், நடைமுறையில், குறைந்தளவு சந்தாதாரராகச் சேர்ந்தும் ஒத்துழைப்புத்தராது, வாயளவில் இலக்கியம் வளர்க்கிறதும் புதுமைதான். வாயால் இலக்கியம் வளர்த்துவிட முடியுமா? ஈழத்தில் வருவதோ இரண்டொரு இலக்கியச் சஞ்சிகைகள்தான், அவற்றுக்குக் கூட சந்தா செலுத்தி, அவற்றின் ஜீவமரணப் போராட்டத்தில் உயிர்ப்பிச்சையளிக்க முடியாதவர்கள், இலக்கியத்தில் எதைத்தான் சாதிக்கப் போகிறார்கள்? தமிழ் மொழி, தமிழ் மொழி என்று மேடைகளில் பிரசங்கிப்பவர்கள்தான் மொழிவளர்ச்சியின் மூல வேரான இலக்கியத்தில் அக்கறையற்றிருக்கிறார்களென்றால், இலக்கியத்தினால் ஏதோ சாதித்து விடுவதாக கூறுபவர்களுமா சோம்பிக் கிடக்க வேண்டும்? இதுவும் புரியவில்லை.

இதைவிடப் புரியாதது இன்னுமொன்று ஈழத்தின் தேசிய இலக்கியம் வளரவேண்டுமென்று ''ஜீவமொழி'' உதிர்க்கும் நமது எழுத்தாளர்களே, முற்போக்குச்சஞ்சிகை ஆசிரியர்களே ''இந்தப் பத்திரிகை தளம்பத் தொடங்கிவிட்டது, இனி நின்றுபோய்விடும்'' என்று சாக்குருவிச் சோதிடம் சொல்லி, சந்தோஷம் காணுவதுதான். தாம் வெளியிடும் சஞ்சிகையைத் தவிர, முற்போக்கு அணியைச் சார்ந்ததாயினும், சாராததாயினும், வேறு எந்தசஞ்சிகையும் வெளிவரக் கூடாது என்பதே, அவர்களின் அடிமன ஆசையாக இருப்பதைக் காணும் போது, 'பொதுவுடைமையின்' பேரில் 'தனியுடைமை' பேணும் இவர்களின் 'இரட்டை நிலை' யின்மேல் எரிச்சல்தான் எழுகிறது.

இந்த விரோதங்களெல்லாவற்றிற்கும் மத்தியில் துணிவும், சத்திய வேட்கையும் கொண்ட இளைஞர்களின் இடைவிடாத இயக்கம் இலக்கியத்தில் மட்டுமல்ல, ஏனைய துறைகளிலும் பெரும் மறுமலர்ச்சியைக் கொண்டு வரும் என்பதே 'அலை'யின் நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி

குப்பிழான். ஐ. சண்முகன்

மார்பில் வலப்புறத்தில் மேற்பக்கமாக விட்டு விட்டுத்தான் வலித்தது- கள்ளிடுவதுபோல எந்தநேரம் அது வருமென்று சொல்லத் தெரியாது. எந்த நேரமும் வரலாம். நடு இரவில் நல்ல நித்திரையிலிருக்கும்போதுகூட வரலாம். ஒரு ஐந்து நிமிடம் அப்படியே சுண்டிச் ... ... சுண்டி வலித்து ..., இந்த வாழ்க்கையே அர்த்தமில்லை என்று நினைக்கத் தூண்டும்படி ..., குரல் விட்டுக் கத்த வேண்டும் போல . அம்மா...... அம்மா என்று முனங்க வேண்டும் போல .....;

அவன் முகத்தில் மெல்லிய இழையாய் ஒரு வேதனையின் சாயல் கவிவது தவிர வேறொன்றும் தெரியாது. இடது கையின் விரல்கள் அந்த இடத்தைத்தடவுவதையே அறியாது செய்த வேலையைச் செய்து கொண்டேயிருப்பான். ஒவ்வீசில் பைல்களைப் புரட்டிக் கொண்டிருப்பான்; றெயிலிலோ வஸ்சிலோ பிரயாணம் செய்து கொண்டிருப்பான். கடற்கரை வெளியில் மாலை கவிந்து வரும் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பான்; நண்பர்களுடன் சர்ச்சை செய்து கொண்டிருப்பான். சமயங்களில் சிரிக்கவும் கூடச் செய்வான். அந்தச் சிரிப்பில் நெருடலாக அந்த வேதனை.

அது தொடங்கி மூன்று மாதங்களாகி இருக்கலாம். அதைச் சகித்து சகித்துப் பழகி ... இப்போது சகிக்க முடியாததாகி, ஒரு எல்லைக்கப்பால் சகிக்க முடியாத நிலையில் இதற்குப் பரிகாரம் காணவேண்டுமென நினைத்தான். அந்த நினைப்பே ஒரு ஆனந்தம்போல இருந்தது. ஆனால் வழமையான அசமந்தத்தில் பழக்கமாகிவிட்ட வேதனைச் சகிப்பில் நாட்கள் நீண்டு ... ... நீண்டு...... செல்ல....

அவன் நண்பன் அவனை ஏசுவான், ''இந்த விஞ்ஞான யுகத்தில் ஏன்ரா அப்பா தேவையில்லாமல் கஷ்டப்படுகிறாய்''.

''எவ்வளவுதான் கொள்கைகள் பேசினாலும் நீ சரியான சோம்பேறி''.

''முதலில் உன்னைத் திருத்திக் கொண்டு தான் பிறகு மற்றவைக்கு சொல்ல வேணும் காணும்''.

எல்லா உந்துதல்களினாலும் ஒரு நாள் புறப்பட்டான். பத்துமணிப் பொழுதென ஞாபகம். ஒரு மைலளவு தூரத்தை கடந்துதான் சென்றான். வெயில் உறுத்தாத மப்புக் கவிந்த வானம்; தட்டு வீட்டில் வாழும் குடும்பங்கள்; வீதியை நிறைத்து அம்மணமாகத் திரியும் குழந்தைகள்; தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரி, சைக்கிள் மணியோசை, ஸ்டேசன் வாங்கில் காத்திருக்கும் குழந்தையை ஏந்திய இளம் தாய். உயிர் ததும்பும் பகல் நேர இயக்கம்.

''இவ்வளவு காலும் இந்த உணர்வு ஏன் என்னை உறுத்தவில்லை?'',

மார்பின் வலப்புறத்தில் மேற்பக்கமாக சுண்டிச் சுண்டி இழுப்பது போன்ற அந்த உணர்வு... ... வாய்விட்டுக் கத்த வேண்டும்போல......... மூன்று நிமிடத்தில் அது அடங்கிற்று.

வானம் வெளித்து வெய்யிலின் அகோரம்; குளிர்பானத் தொழிற்சாலையின் முன் வீதியோரம் நீண்ட உயர்ந்த மதில்; சோடாக் குடிக்கும் பெண்ணின் படம் போட்ட பெரிய விளம்பரம். கால்வாய்க்கும் வீதிக்குமிடையில் செழித்த சோளப் பயிர்களின் பச்சைப் பரப்பு. நீர் பாச்சும் தொப்பி போட்ட மனிதன். நெருங்கிய அணுகலில் அவன் முகத்தில் முத்தாய் கோர்த்து நிற்கும் வியர்வைத் துளிகள் அரச அலுவலகங்கள். மும்மொழிகளிலுமான அறிவிப்புப் பலகைகள். ஓடும் பஸ்கள்; வீதியோரம் மலர் சொரியும் நிழல் மரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியின் ஒரு பக்கத்தில், அடக்கமான ஒரு அறையின் நடுவிலிருந்த கதிரையில், கம்பீரமான உடையில் அந்த மனிதர் அடையாளம் காட்டப்பட்டார். சுற்றிலும் மருந்துக் குப்பிகளும் பரிசோனைக் குழாய்களும் மூக்கைத் துளைக்கும் மருந்து நெடியுமாய் ...

ஒரு புன்முறுவலுடன் நண்பன் தந்த அறிமுகக் கடிதத்தை நீட்டினான். மேலோட்டமான கண் பரவலின்பின் ஊர், பேர், உற்ருர், சுற்றம்: சூழல் பற்றிய விசாரணை.

டாக்டரின் அறை முன்னால் குவிந்து நின்ற சனங்களினூடாக இவனைக் கூட்டிச் சென்று டாக்டரிடம் அறிமுகப் படுத்தினார்.

''எனக்குத் தம்பி முறையானவர் கல்வித் திணைக்களத்தில் வேலை செய்கின்ருர்''

அவன் முகத்தையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர், ''என்ன வருத்தம்''?

அவனும் டாக்டரின் முகத்தைப் பார்த்துக் கொண்டு சொன்னான், அந்த வசீகரிக்கும் கண்களின் ஆழத்தில் ஏதோ சோகம் கவிந்திருப்பது போல இருந்தது. குழுமையாக அணைப்பது போன்ற கருணை நிறைந்திருப்பதை போலவும் பட்டது. டாக்டரின் மூக்கு கொஞ்சம் நீளம் தான்.

மீண்டும் அவனை ஏற இறங்கப் பார்த்தார். முகத்தில் கடுமை தெரிந்தது!

''நல்லாய் குடிக்கிறனீரே ஐஸே? கசிப்பு அடிக்கிறனீரா?'' ''இல்லையே'' என்று பரிதாபமாகத் தலையாட்டினான். ''நான் சிமோக் பண்ணிறதுகூட இல்லை''

''இறைச்சி, நல்ல காரமான சாப்பாடு சாப்பிடுகிறனீராக்கும்'' ''நான் ஒரு வெஜிரேறியன்'' மெதுவாகச் சொன்னான்.

அவன் சொன்ன எதையுமே நம்பத் தயாரில்லாதவரைப் போல டாக்டர் அவனைப் பார்த்தார். தலையை ஆட்டினார். அவனை மட்டும் வெளியே அனுப்பிவிட்டு அவன் அண்ணரை நிற்கச் சொன்னார்.

துள்ளாடியவனாக வெளியே வந்தான். மார்பின் வலது புறத்தில் மேற்பக்கமாக சுண்டி இழுப்பதுபோல ...

சோர்ந்து வாடித் துவண்டிருக்கும் குழந்தை. லொக்கு, லொக்கென இருமி கோழை துப்பும் கிழவன். தலையைச் சுற்றி பண்டேஜ் கட்டுப் போட்டிருக்கும் அரும்பு மீசை இளைஞன். அயர்வு மேலிட்ட ஒரு கர்ப்பிணிப் பெண். இன்னும் சிலர்... கொஞ்சத் தூரத்தில் மூங்கில் கழியின் மேல் பலகை பரவி அதன் மேல் நின்று செங்கற்களை அடுக்கி மாடி எழுப்பும் இரண்டு தொழிலாளர்,

டாக்டரின் அறை வாசலில் காத்து நின்ற அவனை நோக்கி அண்ணர் வந்தார். முகத்தில் ஒரு சோர்வுக்களை. எதுவுமே பேசவில்லை.

டாக்டர் என்ன சொன்னாரென்று அண்ணரிடம் விசாரித்த போதும் அவர் தெளிவான பதிலைத் தரவில்லை. ஏதேதோ சொல்லி மழுப்பினார், சிலவேளை அவன் அறியக் கூடாதவையாக- அவன் அறிந்தால் வேதனைப் படலாம் என அவர் எண்ணியிருக்கலாம் உண்மையாகச் சொல்லப் போனால் அவன்கூட அதில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை அந்த அக்கறையின்மைக்கு வழமையான அசமந்தம் அல்லது என்ன நடந்தாலென்ன என்ற பிடிப்பற்ற போக்குக் காரணமாக இருக்கலாம்.

அடுத்த முறை ஆஸ்பத்திரியில் அண்ணரைச் சந்தித்த போது அவன் சற்று உற்சாகமடைந்தவனாக இருந்தான். முகம் தெளிவடைந்து இருந்தது. கண்களில் படிந்திருந்த அயர்வு அகன்று விட்டது. சொக்கையில் கொஞ்சம் சதைப்பிடிப்பு ஏற்பட்டதுபோலவும் இருந்தது. பேச்சில் கூட ஒரு மிருதுவும், நளினமும், உறுதியுமாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணர் ஆச்சரியப்பட்டுத்தான் போனார். டாக்டரும் அப்படித்தான். ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அந்த வசீகரிக்கும் கண்களால் அவனை ஆழமாகப் பார்த்துக் கொண்டே சொன்னார்.

''நீர் நல்லாய் யோசிககிறனீர் போலை பிரச்சினைகளை இட்டு ''வொறி'' பண்ணக் கூடாது. ஆருக்குத்தான் பிரச்சினை களில்லை''.

அவன் எதுவுமே பேசாது நின்றான். மனத்தில் ஏதேதோ எண்ணங்கள். சோர்ந்து வாடி துவண்டிருக்கும் குழந்தை, கோழை துப்பும் கிழவன், செங்கற்களை அடுக்கி மாடி கட்டும் தொழிலாளர், தொப்பி போட்ட மனிதனின் முகத்தில் முத்தாய் கோர்த்து நிற்கும் வியர்வை...

''மை டியர் போய்'' டாக்டரின் குரலில் ஒரு கம்பீரம் தொனித்தது. ''யாருக்குத்தான் பிரச்சினைகள் இல்லை, சும்மா மனத்தைப் போட்டுஅலட்டாதேயும். கெடுகவும் வொறி பண்ணிறதும் குடற்புண் வர ஒரு காரணமென்று உமக்குத் தெரியுமா?''.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறும் போதுபுதுமனிதனாகத்தான் வெளியேறினான் உலகம் முழுவதுமே ஒருவித மயக்கும் அழகில் பொலிவதாக நினைத்தான். வாழ்க்கை மிகவும் அர்த்தம் நிறைந்தது என்றும் நினைத்தான், மூன்று மாதமாக நினைவில் வராத அவளின் புன்னகை பூத்த முகம் கூட நினைவில் தெரிந்தது ஏதோ பாடல் கூடமுணுமுணுப்பாககிளம்பிற்று! நடையில் கூட ஒரு கம்பீரம்.

அதே வீதி: அதே பாதை

வீதியை நிறைத்து அம்மணமாகத் திரியும்குழந்தைகள்.

சாறத்தின் அடிப்பாகத்தை இடது கையால் தூக்கிக் கொண்டு வீதியை வெறித்து நோக்கும், ஒருவாரமாக 'சேவ்' எடுக்காத விரக்தி நிறைந்த கண்களையுடைய இளைஞன்.

நொண்டிப் பிச்சைக்காரன்;

தட்டு வீட்டின் கதவு நிலையில் சாய்ந்து கொண்டு, ஏக்கத்தோடு போவோர் வருவோரைப் பார்க்கும் கல்யாணமாகாத முப்பது வயதுக் கன்னிப் பெண்,

சிவப்பு எழுத்தில் மதிற் 'சுவரில்' பளிச்சிடும் ''சிலியில்'' மக்களை நசுக்கும் பாஸிச ஆட்சியின் கொடுமைகளை சித்திரிக்கும் சுவரொட்டி.

அவனின் முகம் இருண்டது. பாடலின் முணுமுணுப்பு திடீரென்று அடங்கிற்று. கண்களில் வேதனையின் சாயல் கவிய இடது கை விரல்கள் மார்பின் வலதுபுறத்தில் கீழ்ப்பக்கமாக தடவுவதாக——.

ஒரு வாரமாக இல்லாத அந்த வலி மீண்டும் நெருடுவதாக அவன் உணர்ந்தான்.

''சைய்—— [illegible] வலிக்கிறது''

இதற்கு நிரந்தரமாகவே ஒரு தீர்வு காணவேண்டுமென உறுதி கொண்டான்.

---

## காத்திருப்பு

அலை எறியுங்கடல்
'களங் கட்டிக்'கம்பில்
வெள்ளைத் தனிக் கொக்கு
யாருக்காகக் காத்துளது...?
எனக்குத்தெரியாது!;
அதற்கும்...?

—அ. யேசுராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்ஸீயமும், பஜனைக் கவிஞர்களும்

'பீனிக்ஸ்'

இன்று நம் தமிழ்க் கவிதையுலகில் நமக்கெல்லாம் ரொம்ப சல்லிசாகக் கிடைப்பது முற்போக்குப் புதுக்கவிதைகள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு வெளிவருபவைகள் என்று சொல்லலாம். இந்த அளவிற்கு இந்தக் 'கவிதைகள்' சல்லிசாகக் கிடைப்பதற்கு காரணம் 'முற்போக்குப் புதுக்கவிஞர்'களாக தம்மைச் சொல்லிக் கொள்கிறவர்கள் என்றுஒரு 'லிஸ்டு' தயாரித்தால் அந்த லிஸ்டில் சுமார் இருநூறு முன்னூறு பேருக்கு மேலே இடம் பெறத் தக்க அளவுக்கு எண்ணிக்கையில் மிக அதிகமான பேர்கள் இந்தத் தயாரிப்பில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

'முற்போக்கு புதுக்கவிஞர் லிஸ்டு' இந்த அளவுக்குப் பெருகியிருப்பதும் சாதாரண ஜனங்களுக்கெல்லாம் கிட்டக் கூடிய வகையில் இவர்களது கவிதைகள் நமக்கெல்லாம் ரொம்பச் சல்லிசாகக் கிடைப்பதும் நாமெல்லாம் ரொம்ப சந்தோஷப் பட்டுக் கொள்ளவேண்டிய, வரவேற்க வேண்டிய ஒரு சமாசாரந்தான்:

ஆனால் இவர்கள் எதை எழுதி முற்போக்கு என்று சண்டி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது தான் நமக்கெல்லாம் ரொம்ப சங்கடமாக இருக்கிறது. இந்த சண்டித்தனம் ஏதோ தற்செயலானதாயிருந்தால் நாம் போனால் போகிறது என்று விட்டு விடலாம். ஆனால் இந்த சண்டித்தனத்தையே இவர்கள் ஒரு நடைமுறையாக கொண்டிருப்பதால் நாம் இதைப் பற்றிக் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது.

இன்று கவிதை என்ற பெயரில் எவ்வளவோ எழுதப்படுகின்றன. இப்படி எழுதப்படுகிற கவிதைகள் பலதரப் பட்டவையாகஇருக்கின்றன. பல் வேறுபட்ட விஷயங்களைத்தாங்கி விஷயமேயில்லாமல்வெளி வருகின்றன. இப்படி வெளிவருகிற கவிதைகளின் போக்கை நாம் எப்படி உணர்வது இவைகளில் எதை நாம் முற்போக்கு என்பது, இருக்கிற போக்குகளில் கொஞ்சம் மாறுபட்டது. புதுமையானது. வளர்ச்சிப் போக்கானது. இல்லாவிட்டால் பிற்போக்கு என்று எதைச் சொல்கிறோமோ அதற்கு எதிரானது. இபபடி முற்போக்குக்கு நிறைய் விளக்கங்கள் சொல்லலாம். ஆனால் எத்தனை சொன்னாலும் எதற்கும் ஒரு எதிர்க்கேள்வி வரும். வரச் சாத்தியப்பாடு உண்டு. எது புதுமை, எதுவளர்ச்சி, எது பிற்போக்கு என்று எனவே முற்போக்கு எது என்பதற்கு ஒரு விஞ்ஞான பூர்வமான வரலாற்று பூர்வமான ஒரு விளக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது தேவையாகின்றது.

கவிதை வாழ்க்கை அனுபவங்களிலிருந்து பிறக்கிறது. கவிஞன் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தன் கவிதையைப் பிரசவிக்கின்றான். இந்த வாழ்க்கை அனுபவங்கள் என்பது காலாகாலத்திற்கும் ஒரே மாதிரியாயிருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை. வாழ்க்கை அனுபவங்கள் மாறிக் கொண்டேயிருக்கிறது. ஏனெனில் சமுதாயம் மாறிக் கொண்டேயிருக்கிறது. இப்படி ஏற்படுகிற மாறுதல்கள் சமூகத்தில் ஒரு அங்கமான கவிஞனையும் பாதிக்கிறது. கவிஞன் மாறுகின்றான். கவிஞனது சிந்தனை மாறுகிறது. கவிதையும் மாறுகிறது- இது கவிஞனுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள பொதுவான தொடர்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எதை மாறுதல் என்பது மாறுதல் என்பது பின்னோக்கித் திரும்புவது அல்ல. சரித்திரம் ஒரு போதும் பின்னோக்கித் திரும்புவது கிடையாது. நாம் சொல்கிற மாறுதல் என்பது வளர்ச்சிப் போக்கானது. இயக்கவியல் ரீதியானது. முக்கியமாக அது தனிப்பட்ட மனிதர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது. புறவயமானது. இப்படி புறவயமான மாறுதல்கள் நிகழ்வதற்குக் காரணம் ஒவ்வொரு சமுதாய அமைப்பிலும் நிலவுகிற பொருளுற்பத்தி முறை, அதில் உழைக்கும் சக்திகள் வகிக்கும் பாத்திரம், ஏனென்றால் இந்த உழைக்கும் சக்திகள் வகிக்கும் பாத்திரம்தான் ஒரு சமுதாய அமைப்பை நிர்ணயம் செய்கிறது. அதை ஆக்குகிறது அதை மாற்றியமைக்கிறது, மாற்றியமைத்துக் கொண்டு வருகிறது. மாற்றியமைக்கவும் போகிறது. இதுவேதான் மார்க்ஸியம்.

இதன் அடிப்படையில் இந்த வளர்ச்சிப் போக்கான மாறுதல்களை எவன் உணர்கிறானோ, எவன் தன் கவிதைகளில் இதைப்பிரதிபலிக்கிறானோ, இந்த உழைப்பின் பாத்திரத்தை உணர்ந்து அதன் மாறுதலுக்காக அதன் மேல் நம்பிக்கை வைத்துப் பாடுபடுகிறானோ, அவனையே நாம் முற்போக்குக் கவிஞன் என்கிறோம். அதே மாதிரித்தான் கவிதைகளையும்.

அதேபோல எவன் இந்த சமுதாய அமைப்பு மாறுதலேயற்று நிலையானதாக இருக்கிறது. அல்லது நிகழ்ந்ததே மீண்டும் மீண்டும் நிகழ்கிறது என்று சொல்கிறானோ, அல்லது ஏற்படும் மாறுதல்கள் எல்லாம் புறவயமானது அல்ல என்று மறுத்து எல்லாம் அகநிலை அல்லது சமுதாய விதிகளுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தியால் ஏற்படும் மாறுதல்கள் என்று எவன் இந்த சமுதாயத்தை இயக்கும் சக்திகளான உழைப்பின் பாத்திரத்தை மறுத்துப் பாடுகிறானோ அவனையே நாம் பிற்போக்கு என்கிறோம். அதே மாதிரித்தான் பிற்போக்குக் கவிதைகளையும்.

இது முற்போக்கு பிற்போக்கு பற்றிய மிகச் சாதாரண எளிய அணுகு முறைகள் இந்த அணுகுமுறைகளே கவிதைகளாகி விடுவதில்லை? ஏனென்றால் இவைகள் வெறும் கருத்துக்கள். இந்தக் கருத்துக்கள் எங்கே ஸ்தூலப் படுத்தப் படுகின்றன. அல்லது எங்கிருந்து பெறப்படுகின்றன? அதாவது மாறுதல் என்பவனும், மாறுதலற்றது என்பவனும், வளர்ச்சி என்பவனும், வளர்ச்சியற்றது என்பவனும் எந்தக் களத்திலேயிருந்து தான் அப்படிச் சொல்வதற்கான நம்பிக்கையைப் பெறுகிறான் என்றால், அந்தக் களம் வாழ்க்கைதான், அதாவது வாழ்க்கை மாறுகிறது வளர்கிறது என்று சொல்கிறவனும்; மாறவில்லை, வளரவில்லை என்று சொல்கிறவனும் ஒவ்வொருவனும் தான் சொல்கிற விடயத்தில் நம்பிக்கையோடிருக்கிறான். அந்த நம்பிக்கையை இயங்கிக் கொண்டிருக்கிற வாழ்க்கையிலேயிருந்துதான் ஒவ்வொருவனும் பெறுகிறான். ஆக முற்போக்கு என்று சொல்லப்படுபவனும் வாழ்க்கையை அவன் பார்க்கிற பார்வையில் புரிந்து கொள்கிற அர்த்தத்தில் கண்ணோட்ட அடிப்படையில்தான் பாகுபடுத்தப் படுகிறானே தவிர இரண்டுபேருடைய கண்ணோட்டங்களுக்கும் ஊற்றுக் கண்ணாயிருப்பது வாழ்க்கைதான் என்பதில், இரண்டு பேருக்குமே பாகுபாடு இருக்க முடியாது. ஏனென்றால் இருத்தலில் இருந்துதான் சிந்தனை. இது எல்லோருக்கும் பொது.

இதில் முற்போக்கு என்று தன்னைச் சொல்லிக் கொள்பவனுடைய பார்வை வாழ்க்கை பற்றி எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் அவன், வாழ்க்கை மாறுகிறது. வளர்கிறது என்று சொல்கிறான் எந்த மாற்றமும், வளர்ச்சியும் ஆகாயத்திலேயிருந்து குதித்துவிட முடியாது. ஏதாவதொரு களத்தில்தான் அது நிகழ முடியும். களம் நிலவுகிற வாழ்க்கைதான, நிலவுகிற வாழ்க்கையிலிருந்துதான்மாறுதல் நிலவுகிற வாழ்க்கையிலிருந்துதான்வளர்ச்சி, அதேமாதிரித்தான் இந்தமாற்றம் வளர்ச்சிகளில் நம்பிக்கைவைப்பது என்பதும்ஏனென்றால்எந்த நம்பிக்கையும்கூட ஆகாயத்திலே இருந்து குதித்துவிடமுடியாது. நிலவுகிற களத்திலேயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்துதா நம்பிக்கை. அந்தக்களத்திலும் மாற்றம் வளர்ச்சி ஏற்படுவதற்கான மார்க்கம் தெளிவுறத் தெரிந்தால் தான் இந்த நம்பிக்கையும் சாத்யம்.

ஆகவே இன்றைய முற்போக்காளன் என்று தன்னைச் சொல்லிக் கொள்பவனுக்கு இப்போதைய சமூக அமைப்பு, நிலவும் பொருளுற்பத்தி முறை. அதற்கும் உழைக்கும் சக்திகளுக்குமிடையிலுள்ள முரண்பாடுகள், நிகழும் போராட்டங்கள் இதிலிருந்து மீட்சி பெறுவதற்கான அதன்நடவடிக்கைகள்மீட்சிபெறுவதற்கான மார்க்கம் இந்தசகலமும்மட்டுமல்ல. இந்த சகலமும் வாழ்க்கையை மறந்துவிடக் கூடாது. வாழ்க்கையை எப்படிப் பாதிக்கின்றன என்று இந்தப் பாதிப்புக்களை வாழ்க்கையில் தேடுபவனாக, வாழ்க்கையின் மூலம் சித்திரித்துக் காட்டுபவனாக இருக்க வேண்டும் அதோடு தன்னை முற்போக்குக் கவிஞன் என்று சொல்லிக் கொள்பவனுக்குள்ள ஒரு மிகப் பெரிய கஷ்டம். அவனுக்கு மேலே சொன்ன முற்போக்கும் தெரிந்திருக்க வேண்டும். கவிதையும் தெரிந்திருக்க வேண்டும்.

இதைத்தான் இங்கே திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இன்றைய முற்போக்குக் கவிஞர்கள்என்று தம்மைப் பறைசாற்றிக் கொள்ளும் பலருக்குமுற்போக்கும் தெரிவதில்லை. கவிதைகளும் தெரிவதில்லை இதனால் ஏற்படுவதுதான் சகலவித சச்சரவுகளும், வேறு வார்த்தைகளில் சொல்லப் போவதானால் இதுதான் இப்போதைய முற்போக்குக் கவிதையுலகைப் பிடித்துள்ள மிகப் பெரியதுரதிர்ஷ்டம்.

கவிதைக்கு வருவோம். கவிதை புதுக்கவிதையானது ஏன்? வாழ்க்கையனுபவங்கள் மாறிக் கொண்டிருக்கின்றது என்று சொன்னோம். இந்த அனுபவங்கள்மாறுவதால் கவிஞன் மாறுகிறான். கவிஞனது சிந்தனை மாறுகிறது. புதிய சிந்தனை உருவெடுக்கிறது. புதிய சிந்தனை பழைய யாப்பின் கதிக்குள் அடங்குவதில்லையாகவே யாப்பு மீறப்படுகிறது. புதுக் கவிதை பிறக்கிறது. இப்படி புதுக்கவிதை என்று சொல்லும் போது புதிசு என்பது தற்காலிகமானது எப்படி? அணா பைசா இருந்த நாளில் நயா (புதிய) பைசா வந்த மாதிரி. நயா என்பது கொஞ்சகாலத்திற்குத்தான். இப்போ யாரும் பழக்கத்திலுள்ள நாணயத்தை நயா பைசா என்று சொல்வதில்லை. பைசாதான், அதே மாதிரித்தான் புதுக்கவிதையும். புதிசு என்பது கொஞ்ச காலத்திற்குத்தான். எஞ்சுவது நிரந்தரமானது கவிதைதான். இதுபுதுக்கவிதை இயக்கத்திலிருக்கும்சகலருக்கும்பாலபாடம்.பாடம் இது என்பதால் யாப்பு மீறப்பட்டுபுதுக்கவிதைபிறக்கவில்லை.யாப்புமீறப்படுவது தவிர்க்க முடியாததாகிப் போனதால் அதுவே பாடமாயிற்று.

எஞ்சுவது கவிதைதான். அப்படியானால் கவிதை எதுக்கு: கவிதை மற்றவர்களுக்கு எப்படியோ, ஆனால் இன்றைய முற்போக்காளர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களுக்கு கவிதை, தன் முற்போக்குச் சிந்தனைகளின் அடிப்படையில் நிலவுகிற வாழ்க்கையில் நேர்ந்த அனுபவங்களை தன் முற்போக்குப் பார்வையில் கவிதையாக்கி வெளியிட, கவிதை என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொருவனும் தன் அனுபவங்களை, சிந்தனைகளை வெளியிட எத்தனையோ வடிவங்கள் இருக்கின்றன. மேடையிலே ஏறிப் பேசலாம். ராகம் போட்டுப் பாடலாம், கட்டுரை எழுதலாம். இப்படி எத்தனையோ வடிவங்களில் ஒருவன் தன் வாழ்க்கையில் நேர்ந்த அனுபவங்களை தன் பார்வையில் வெளியிடலாம். ஆனால் வெளியிடச் சகக்கொள்ளும் ஒவ்வொரு வடிவமும் அந்தந்த வடிவத்திற்குரிய அம்சங்களைத் தாங்கி நிற்க வேண்டும். அதே மாதிரி ஒருவன் கவிதையில் தன் சிந்தனைகளை வெளியிடுகிறான் என்று சொன்னால் அந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை கவிதைகளுக்குரிய அம்சங்களோடு வெளிப்பட வேண்டும். இப்படி கவிதைகளுக்குரிய அம்சங்களோடு வெளிப்படாத சிந்தனையை வேண்டுமானால் சிந்தனை என்று ஏற்றுக் கொள்ளலாமே ஒழிய, கவிதை என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அதாவது கவிதையில் வெளிப்படும்பார்வை அல்லது சிந்தனை கவிதையாகவே இருக்க வேண்டும் என்பது, இதன் பொருள்.

அப்படியானால் எதைக் கவிதை என்பீது? இங்கே தான் பலபேருக்கு சிக்கல் எழுகிறது. காரசாரமான பலத்த விவாதங்கள் எழுகின்றன, பலர் பலவிதமான கருத்துக்களைத் தான்தோன்றித் தனமாகத் தொட்டி தங்கள். தங்கள் அல்லது சகபாடிகளின் எழுத்துக்களையே கவிதை என்பதற்கான ஆதாரங்களைத் தேடி வம்பு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இதற்கு இதுதான் விளக்கம் என்று ஒரு வரியில் பதில் சொல்லி விடுகிற மாதிரியான சாத்தியம் எதுவும் கவிதைக்கு இல்லை. சொல்லப் போனால் கழுதை என்பது எதை என்பது மாதிரியான ஒரு கேள்வி, கவிதை என்பது எதை என்பது. ஏனென்றால் கழுதை என்பது கழுதையைத் தான். கழுதையையே பார்க்காதவனிடத்தில் கழுதையைப் பற்றிச் சொல்லி விட முடியாது. பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் கழுதையை, அதே போல படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் கவிதையை. கவிதைக்கு அணிகலன் யாப்பு அல்ல. கவிதைக்கும் செய்யுளுக்கும் வித்தியாசம் தெரியாமல் யாப்பே கவிதைக்கும் அணிகலன் என்று குழம்பிய காலம் ஒன்று இருந்தது. கவிதை வளர்ந்து யாப்பை உதறியது. யாப்பற்றதும் கவிதையே என்று நிரூபணமாயிற்று. கவிதை செழித்தது. கவிதைக்கு அணிகலன் யாப்பு அல்ல என்ற புதிய கருத்து உதயமாயிற்று. இது கவிதை வளர்ந்த சுருக்கம். இங்கே பலபேருக்கு ஒரு சந்தேகம் - யாப்பை உதறினால் கவிதையில் மிஞ்சுவதுதான் என்ன? நம்முடையபதில், 'யாப்பு' காலத்திற்குக் காலம் மாறுபடுவது; வளர்ந்து வருவது. ஆகவே ஒரு கருத்தையே பிடித்து தொங்கிக் கொண்டு. இதுவேதான் கவிதைக்கு யாப்பு என்று வம்படி பண்ணிக் கொண்டிருப்பது காலத்திற்கு ஒவ்வாதது. கவிதைக்கு பிரதானம் ஜீவன், புதிய அனுபவங்களில் பிறக்கும் புதிய ஜீவன் தன்னை முழுமையாய் வெளிப்படுத்திக் கொள்ள, தனக்குத் தடைகளாயிருக்கும் பழைய யாப்பை உதறி புதிய யாப்பை மேற்கொள்கிறது. அது தான் பொருளியல் ஒழுங்கு. அதனால்தான் ''இன்றைய கவிஞனுக்கு யாப்பின்மை ஒரு குற்றமாக இருக்க முடியாது, கவிதையின் பொருளம்சத்தில் குற்றம் இருக்கக் கூடாது என்பதே அவன் அக்கறை'' ஆகவே— ''பொருளியல் ஒழுங்கே புதுக் கவிதையின் யாப்பு'' என்றார் பிரமில்.

ஆகவே இதை மறந்து யாப்பற்ற கவிதையே புதுக் கவிதை என்ற பிரமையில் கவிதைக்கும் வசனத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் வசனத்தை உடைத்துப் போடுவதே புதுக் கவிதையாகி விட முடியாது. ''கவிதை அதன் பொருளாகவே உருப் பெற வேண்டும் என்பதுதான் இன்றைய சித்தாந்தம், நிதர்சனத்தை ஹ்ருதயமும், புத்தியும், தத்துவ தார்மிக உணர்வும் கொண்ட கண்களோடு சந்தித்தால் தான் பொருள் என்ற அம்சம் செழிக்கும்''— பிரமில். இன்னும் பிரமிலின் வார்த்தைகளிலேயேசொன்னால்; ''தர்க்கத்திற்கு இணங்காத பொய்மைகளைக் கவிதை என்று கண்ட காலம் தமிழ்க் கவிதையின் க்ஷீண தசையில்தான் நேர்ந்தது. இந்த நிலையிலிருந்து விடுபட்டு தர்க்க ரீதியான தத்துவ ரீதியான பொருட் செறிவின் விளைவாகப் பிறந்ததுதான் யாப்பற்ற கவிதை''— கவிதை எல்லாவகைச் செயற்கைகளையும் உதறுகிறது.

நாம் பார்ப்போம், கவிதை என்பதுதான் என்ன? கவிதை என்பது அதன் பௌதீகத் தன்மையில் வெறும் வரி வடிவம் பெற்ற வார்த்தைகள் தான். இதில் சந்தேகமேயில்லை. ஆனால் இந்த வார்த்தைகள் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியில் எங்கிருந்து வந்தன. ஒரு கவிஞனிடமிருந்து ஏன் வந்தது? அவன் ஏதோ சொல்ல வேண்டுமென உந்தப்பட்டதில் இந்த வரிகளில் இந்த வார்த்தைகளை அடுக்கிச் சொன்னான். அதை வசனமாக்கி நீட்டிப் படிக்க நினைத்தாலும் அவன் எழுதிய கதியிலேயேதான் வரிகளைப் படிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு வரியும் தனித்தனியே பொருளாம்சத்தோடுதிகழ்கிற ஒவ்வொரு வரியும் அடுத்த வரியோடுவசனகதியில் அல்ல கவிதை கதியிலேயே தொடர்பு கொள்கிறது. கவிதை அதன் முழுமையில் பொருள் சிதையாமல் நிற்கிறது. ஆகவே ஒரு கவிஞன் தன் அனுபவத்தை வெளியிடப் பொறுதகிய சில வார்த்தைகளில் வசனகதியில் அல்லாமல், கவிஞன் எழுதுகிற வரிகளின் கதியிலேயே தொடர்பு கொள்ள வைக்கிற ஒவ்வொரு வரியிலும் பொருளாம்சம் செழிக்கிற, பொருளாம்சம் முழுமை பெற்றதும் வரிகளும், முடிந்து போகிற அனாவசியமான வார்த்தைகளற்ற சிக்கனமான. அந்த சிக்கனத்தின் மூலமே தன்னைப் பீறிட வைத்துக் கொள்கிற ஒரு ஜீவனுள்ள பாஷையைக் கவிதையென்று சொல்லலாமா? சொல்லலாம் போல் தோன்றுகிறது.

பொதுவாக கவிதை, அது எழுதப்படுவதற்கு முன்பே கவிஞனின் மனதில் உருவெடுத்து விடுகிறது. இப்படி உருவெடுக்கிற கவிதை தன்னை வெளிப் படுத்திக் கொள்ள வார்த்தைகளைத் தேடிக் கவிஞனை —ஹிம்சிக்கிறது. கவிஞன் வதைகிறான். கவிதைப் பொருளும் வார்த்தைகளும் மோதுகின்றன, சம்பாஷிக்கின்றன. இணக்கமுள்ள வார்த்தைகள் காந்தம் போல் கவிதைப் பொருளுக்கேற்ப வந்து ஒட்டிக் கொள்கின்றன. இணக்கமற்றவை கழிந்து ஒழிந்து போகின்றன, எஞ்சுவது வரிவடிவம் பெறுகிறது. கவிதை வெளிப்படுகிறது. இதுதான் நிஜமாகவே கவிஞன் என்று சொல்லப் படுகின்ற ஒவ்வொருவனுக்கும் கவிதை பிறக்கும் அனுபவமாக இருக்கும் என்று சொல்லலாம்.

இதெல்லாம் தற்காலக் கவிதை பற்றி இதுவரை கிடைத்திருக்கிற அனுபவங்களில் ஏதோ கொஞ்சம், இன்னும் அனுபவங்கள் செறியச், செறிய இதுபற்றிய கருத்துக்கள் செழிக்கும், கவிதையும் செழிக்கும் என்பது நிஜம். இந்த அடிப்படையில் இங்கே முற்போக்கு என்று சொல்லிக் கொள்கிறவர்கள், சமுதாய மாறுதல்களுக்காகப் பாடுபடுபவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களுடைய கவிதைகள் எப்படிப் பட்டதாயிருக்க வேண்டும்? சமுதாய மாறுதல்களை நிகழ்த்தும் பிரதான சக்திகளான உழைக்கும் மக்களை அது நடத்தும் போராட்டங்களை, அவர்களோடே வாழ்ந்து அவர்களிடமிருந்து கற்று, தன் முற்போக்குப் பார்வைகளின் அடிப்படையில் அவர்களிடமிருந்து உணர்ந்தவைகளை, உணர்வு பூர்வமாக அவர்களுடைய வார்த்தைகளில் அவர்களுக்காகவே படைத்து அவர்களைத் தட்டியெழுப்பி, அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக— அதே சமயம் கவிதையாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கவிதைகளைத் தான் நாம் முற்போக்குக் கவிதைகள், மக்கள் கவிதைகள் என்று சொல்ல முடியும். சொல்ல அருகதையும் உண்டு.

ஆனால், மக்கள் கவிஞர்கள் முற்போக்குக் கவிஞர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் இங்கே தமிழில் எப்படி அல்லது எதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கும் மக்களைப் பற்றி ஸ்தூலமான வாழ்வைப் பற்றி கவலையிருப்பதாய் தோன்றவில்லை. இவர்களுக்கென்று ஒரு கற்பனை உலகம் இருக்கிறது. இந்தக் கற்பனை உலகில் சஞ்சாரம்செய்து கொண்டே இவர்கள் நிதர்சன வாழ்வை மறந்து தங்கள், கற்பனை உலகிலிருந்து வரிகளைப் பொழிந்து, அச்சிலே சுற்றி பெயரைப் பார்க்கும் பெருமையையே பிரதானமாக்கி கவிதைகள் என்று மயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு கவிதையும் முக்கியமில்லை, மக்களும் முக்கியமில்லை. தாங்களும், தாங்கள் பிரபல்யமும்தான் முக்கியம்' இந்த பலவீனங்களை மறைக்கத்தான் இவர்கள் தங்களுக்குச் சுலபமாக முற்போக்கு முலாம் பூசிக் கொள்கிறார்கள். அந்த முலாம் இவர்களுக்கு ரொம்ப சௌ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனக்குட்டிக் கதை

ஒருவன் புதிய சப்பாத்து வாங்க முடிவு செய்தான், உடனே அவன் தன் பாதங்களின் அளவை எடுத்து விட்டு, கடை வீதிக்குச் சென்று ஒரு சப்பாத்துச் செய்பவனைக் கண்டு பிடித்தான்.

''ஐயா, கால் அளவைக் கொண்டுவர மறந்து விட்டேன்'', என்று கூறிவிட்டு அதை எடுப்பதற்கு வீட்டுக்கு ஓடினன்.

அவன் கடை வீதிக்குத் திரும்பி வந்த பொழுது கடைகள் பூட்டப் பட்டு விட்டன. அவனால் சப்பாத்து வாங்க முடியவில்லை.

''நீ ஏன் சப்பாத்தைப் போட்டுப் பார்க்கவில்லை என்று அவனுடைய அயலவன் கேட்டான்.

''நான் அளவுகோலைத்தான் அதிகம் நம்புகிறேன்'' என்றான் அவன்.

கர்யமானதாயிருக்கிறது. இதனுலேயே இவர்களுக்கும், மக்களுக்கும் சம்பந்தமில்லாமல் போகிறது. இவர்களது கவிதைகளுக்கும் நிதர்சன வாழ்வுக்கும் சம்பந்தமில்லாமல் போகிறது இதன் விளைவுதாம் சிலர் பைபிள் வரிகளுக்குச் சந்தம் கொடுத்து பாடிக் கொண்டிருக்கிருர்கள். சிலர் வசன நடையை வரிப்பிளவு செய்து கவிதையாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிருர்கள். சிலர் மார்கழி மாச திருப்பள்ளியெழுச்சி மாதிரி'' புரட்சியே வருக! ''புரட்சியே வருக!'' என்று கிழக்கு சிவக்க காத்திருக்கிருர்கள், இல்லாவிட்டால் ''வசந்தமே வருக! வசந்தமே வருக', என்று (அக்னி புத்திரன் வசந்தத்தின் வருகைக்காக மட்டுமே ஒரு எட்டுப் பத்துக் கவிதைகள் பாடியிருப்பார் போலிருக்கிறது!) வசந்த பஜனை செய்கிருர்கள். அதுவும் தவறினால்

வரிகளைக் காதலிக்காக ''ஏங்கி புண்பட்ட நெஞ்சோடு கண் மூடித் தூங்குகிறேன், கனவுகளைக் கலைக்காதீர் ஒரு நாளும் எழுப்பாதீர்'' என்று ''உயிருறக்கம்' கொண்டு 'புரட்சி வரும்போது மட்டும்' கொஞ்சம் எழுப்பிவிடுங்கள்' என்று படுக்கையை விரித்து விடுகிருர்கள். முழித்திருக்கிற ஒரு சில கவிஞர்களும் இந்த சமுதாயத்தில் சகலருக்கும் தெரிந்த ஏற்றத் தாழ்வுகளை வைத்து;

''நீங்கள் ராஜ வீதிகளிலே
பவனி வரும் போது
நாங்கள் நடை பாதைகளிலே
கிடந்தோம்''—
''நீங்கள் தர்பார் மண்டபங்களிலே
கொலு வீற்றிருக்கும் போது
நாங்கள் வாயில் காவலர்களாக
நின்ருேம்''—
''நீங்கள் தங்கப் பட்டயங்களை
எடுத்துக் கொண்டு
எங்களுக்குத் தாமிரப் பட்டயங்களைத்
தந்தீர்கள்''

—என்று இப்படி நீங்கள் நாங்கள் போட்டு 'வர்க்கப் பிளவை' வெளிப்படுத்துவார்கள். இல்லாவிட்டால்

''பரிதி புணர்ந்து
படரும் விந்து''

—என்று பிரமில் 'விடிவு' எழுதினுல் பிற்போக்கு.

''இருட்டுப் புணரலில்
கம்பளக் கருப்பில் சிதறி விழுந்த விந்துத் துளிகள்''

என்று தமிழ் நாடன் 'நட்சத்திரப் பூக்கள்' எழுதினுல் அது முற்போக்கு (விந்து நட்சத்திரம் மாதிரிச் சிதறுமாம். இருட்டுப் புணரல் நடத்தியது யார். தெரியாது) வைத்தீஸ்வரனின் 'மௌனய் வீதி' கவிதை பிற்போக்கு ஏனென்ருல் அதில் வீரவுணர்ச்சி ஊட்டப் படாமல் (தமிழர்கள் இல்லையா) மனிதனை ஓடி ஒழியச் சொல்லுகிருராம் ஆனல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வியட்நாம் அலைவரிசையில்
நீங்கள் கேட்டு வந்த
வேதனைப் பாடல்களின்
ஒலிபரப்பு
இத்துடன் முடிகிறது.''

என்று மு. மேத்தா 'சமாதானம்' கவிதை (கண்ணீர்ப் பூக்கள் தொகுதி) எழுதினால் அது முற்போக்கு என்று கண்டுபிடித்துக் கொண்டிருப்பார்கள். நடு நடுவே "நீங்கள் இப்படிச் செய்வதினால் பூமியில் சிந்தப் பட்ட எல்லா நீதிமான்களின் இரத்தத் திற்கும் உங்களிடம் பழிவாங்கப்படும். அந்தத் தண்டனைகள் எல்லாம் இந்தத் தலைமுறை மீதே சுமத்தப்படும். இதை உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். (ஒரு கவிஞனின் சிவைப்பாடு — புவியரசு) என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்ளும் கவிதையாக்க முயற்சிக்கப் பட்டிருக்கும் பைபிள் வரிகளின் கூக்குரல் மறுபடியும் வசந்தத்திற்குப் போய்;

''சூரியாஸ்தமனத்திற்குப் பின்னால்
சந்திரோதயம் புஷ்பிப்பதைப் போல்
வசந்தமே......
இதய விம்மித அலைகள் ரீங்கரிக்க
நீ உதயமாவது எப்போது?''

என்று பஜனை. வசந்தத்தை எதிர் நோக்கி -அக்கினி புத்திரன் (சந்திரோதயம் புஷ்பிக்குமாம்)

இப்படி இன்றைய முற்போக்கு கவிஞர்களிடமிருந்து நிறைய சொல்லலாம். ஆனால் அது இங்கே தேவையில்லை. மொத்தத்தில் சுருக்கமாக இவர்கள் தங்களை முற்போக்கு கவிஞர்கள் என்று சொல்லிக் கொண்டு தாங்கள் எழுதும் சோரம் போனவரிகளில் தங்களை இழந்து கவிதையையும் இழந்து சூரிய, சந்திர, நட்சத்திர ராக்ஷஸ, ஸௌந்தர்ய, ரத்த புஷ்பங்களையும், உதய அஸ்தமன, விடியல்களையும் வானம், மேகம், மழை கர்ப்பங்களையும், மயானம், கல்லறை, சவப்பெட்டிகளையும் இப்படி ஒரு ரெண்டு மூணு டஜன் வார்த்தைகளை வைத்துக் கொண்டு நடு நடுவே புரட்சித் தோள்களை உயர்த்தி கோபாக்கினியோடும், ஆவேசத்தோடும், அக்கினி வீணைகள் வாசித்து ஆளும் வர்க்கத்தை நடுநடுங்க வைப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி நினைத்துக் கொண்டிருப்பதோடில்லை. தங்களின் இந்த வினைப் பிறகு எதிரானவர்களையெல்லாம் உடனடியாக மாயாவாத 'பிற்போக்கு' 'பூர்ஷ்வா' 'நச்சிலக்கிய' வாதிகள் என்று முத்திரை குத்தி அதன் மூலமே தங்கள் 'முற்போக்கு' ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற பிரமையில் மற்றவர்களை ஏமாற்றுவதோடு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

இவர்களுக்குநாம்ரொம்ப பணிவோடும் தோழமையோடும், சொல்லிக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல. இந்த நாட்டில் ஆளும் வர்க்கத்தை நடுநடுங்க வைக்கப் போவது - இப்போ முற்போக்குக் கவிஞர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் அல்ல, ஸ்தாபன ரீதியாகத் திரண்டு கொண்டிருக்கிற தொழிலாளி வர்க்கம் அதோடு ஆளும் வர்க்கத்தை கவிதை நேரடியாக நடுநடுங்க வைக்கவும் முடியாது. அந்தக் கவிதைகள் ஊட்டும் உணர்வில் இந்த சமூக அமைப்பைப் புரிந்து கொண்டு எழுச்சியுறும் தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே அது சாத்தியம். இது வரலாறு.

ஆகவே இவர்கள் கவிதைகள் வாழ்க்கையிலிருந்து வாழ்க்கையை உணர்த்துவதாகவும், சிதறிக் கிடக்கும் தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதாகவும், அவர்களுடையநேச சக்திகளை உணர்த்தி அவர்களுடைய ஒற்றுமைக்கு போராட்டத்திற்கு உத்வேகம் ஊட்டுவதாகவும், அதே சமயம் கவிதையாகவும் இருக்க வேண்டும் என்பதை இவர்கள் உணர வேண்டும்.

சும்மா "ரோம் தீப்பற்றி எரியும் போது நீரோ பிடில் வாசித்த மாதிரி" என்று இங்குள்ளவர்களை 'பூர்ஷ்வாக்கவிஞர்கள்' என்று கிண்டல் செய்து விட்டு சமீபத்தில் சுமார் 20 லட்சம் ரயில்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் 23 நாள் பயங்கரமான அடக்கு முறைகளையும் தாக்குதல்களையும் சமாளித்து வேலை நிறுத்தம் செய்து போராடிக் கொண்டிருக்கும் நேரத்திலும் நாங்கள் 'விடியல் கீதங்கள்தான் பாடுவோம்' அது தான் முற்போக்கு என்றுசொல்லிக் கொண்டிருப்பதால் பிரயோசனம் இல்லை.

அதே மாதிரி 'நீங்கள்' 'நாங்கள்' போட்டு சும்மா இந்த ஏற்றத் தாழ்வையே பாடிக் கொண்டிருந்தாலும் எந்த வித பிரயோஜனமும் இல்லை. இப்படியெல்லாம் எழுத விஷேசப் பிரக்ஞையோ' கவித்துவமோ தேவைப் படுவதாகவும் தோன்றவில்லை. சும்மா ரோடில் போகிற போக்கில் 'இன்று நாற்பது' 'இனியவை நாற்பது' மாதிரி— 'நீங்கள் நாற்பது, நாங்கள் நாற்பது' என் நானூறே கூட-

''நீங்கள் சிம்மாசனத்திலே குந்தியிருந்தபோது நாங்கள் சிந்துவாரற்றுக் கிடந்தோம்'' ''நீங்கள்''ஏர்கண்டிஷனில் வாழ்ந்தபோது நாங்கள் எரியா வெய்யிலில் வதைந்தோம்.''

''நீங்கள் குலோப்ஜான் சாப்பிட்டபோது நாங்கள் கூழுக்காக அலைந்தோம்'' என்று எல்லோரும்பாடிவிடலாம். ஆனால் அது கவிதையாகாது. முற்போக்குமாகாது. ஏற்றத் தாழ்வு இருப்பது எல்லோருக்கும் தெரியும். இது எப்படி மாறும் என்பது தான் பலருக்குத்தெரியாது. அதோடு இந்த மாற்றமும் வாழ்க்கையை விட்டுத் தனிப் பிரிந்து அப்பால் எங்கேயும் நிகழ்ந்துவிடப் போவதுமில்லை. இவை வாழ்க்கையோடிணைந்தவை. நிலவும் வாழ்க்கையில் அந்த மாற்றம் எப்படி நிகழ்கிறது என்று கண்டு உணர்த்துவதுதான் முற்போக்கு கவிஞனின் வேலை.

அதே மாதிரி தான் புரட்சியும்,புரட்சி, பஜனை பாடுவதால் வந்து விடாது· நம்மைப் பொறுத்தவரைக்கும்வரம் வேண்டிப் பாடுகிற பக்திப் பாடல்களுக்கும் ஸ்தூலமான எந்த அடிப்படைக் காரணத்தையும் காட்டாமல் புரட்சியே வருக பாடிக் கொண்டிருப்பதற்கும் ஒன்றும் அவ்வளவாகப் பெரிய வித்தியாசம் இல்லை. காலத்தின் தவிர்க்க முடியாத தன்மையால் கட்டாயம் வரப்போகிற புரட்சியை வருக! வருக! பாடிக்கொண்டிருப்பதால் அது சீக்கிரம் வந்துவிடப் போவதில்லை. வராதே, வராதே என்பதால் தூரவிலகிப் போய் விடவும் போவதில்லை. எனவே நம் வேலையெல்லாம் வரப்போகிற அதை வரவேற்கப் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பதல்ல. அது வரப்போகிறதற்கான சாத்தியக் கூறுகளை, அதற்கான — நம் கண் முன்னே நிகழ்ந்துவரும் - வாழ்வின் மாறுதல்களைக் கண்டு, உரிய சக்திகளுக்கு உணர்த்தி, திரட்டி பலமூட்டுவதே நம் வேலை. அந்த வேலையில் நம் கவிதைகளும் ஒரு அங்கம் வகிக்கும் அவ்வளவே தவிர மற்றப்படி கவிதைகளே புரட்சியை நடத்திவிட முடியாது. அப்புறம் ரொம்ப முக்கியமான ஒன்று. வெறும் சிந்தனைகளே கவிதைகளாகி விடுவதில்லை. அதே போல முற்போக்குச் சிந்தனைகளே முற்போக்குக் கவிதையும் ஆகிவிட முடியாது. இந்த சிந்தனைகளின் அடிப்படையில், இந்த சிந்தனைகள் தரும் பார்வையில் வாழ்க்கையை எந்த அளவுக்கு நாம் கூர்ந்து நோக்குகிறோமோ அந்த அளவுக்கு, எந்த அளவுக்கு இந்தச் சிந்தனைகளும், வாழ்க்கை இயக்கங்களும் இணக்கம் பெறுகிறதோ அந்த அளவுக்கு, நாம் எதைக் கவிதையாக்க முயற்சிக்கிறோமோ, அந்தக் கவிதைப் பொருள் பற்றிய நம் அனுபவங்கள் எந்த அளவுக்குச் செழுமையோடிருக்கிறதோ அந்த அளவுக்கு இயல்பாய் இருக்கும், கவிதை.

ஆகவே கவிதை எழுதுவதற்காக எங்கேயும் அலைந்து கொண்டிருக்காதீர்கள். கவிதை எழுத வேண்டுமே என்பதற்காக எழுதாதீர்கள். நாம் எங்கே அலைந்தாலும் சுற்றி சுற்றி உழன்று கொண்டிருப்பது இந்த வாழ்க்கை மேம்பாட்டுக்காகத் தான். ஆகவே வாழ்க்கையோடு நில்லுங்கள். வாழ்க்கையை உன்னிப்போடு நோக்குங்கள் அதன் மேம்பாட்டுக்காக உழைக்கும் சக்திகள் நடத்தும் போராட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கம் நில்லுங்கள். அவர்களோடு கலந்து அவர்களோடு ஒருவராக நீங்களும் மாறுங்கள். உங்களைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கும் 'தயாரிப்பு வார்த்தைகள்' உங்களை விட்டு விலகிப்போகும். புதியமக்கள் வார்த்தைகள் உங்களுக்குக் கிடைக்கும். ஜீவனுள்ள வாழ்வின் உண்மையும் உங்களுக்குப் புரியும். புதிய மக்கள் கவிதைகளும் உங்களிடமிருந்து பிறக்கும்.

அப்புறம் இவர்களுடைய விமர்சனம் இன்றைய முற்போக்காளர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் யாருமே ஒரே முகாமில் ஒற்றுமையாக இல்லை என்பது நமக்குத் தெரியும். இவர்களுக்குள்ளேயே பல சிறு சிறு குழுக்களாகப் பிரிந்திருக்கிறார்கள். இப்படி குழுக்களாகப் பிரிந்திருப்பதை நாம் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இந்தக் குழுக்கள் கொள்கை அடிப்படையில், பார்வை அடிப்படையில் பிரிந்திருந்ததானால் நாம் சந்தோஷப்படலாம். ஆனால் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்ளாமல், அப்படி விமர்சிப்பவனை ஒதுக்கி விட்டு பரஸ்பரம் ஒருவரையொருவர் சொறிந்துகொள்வதற்கும், வேண்டாதவனைச் சாடுவதற்காகவுமே இப்படி கும்பல் பிரித்திருக்கிறார்கள். என்பதைப் பார்க்கும் போதுதான் நமக்கு வேதனையாக இருக்கிறது.

'பிரமிளி'ன் கவிதையை 'பிற்போக்கு' என்று சொல்லிவிட்டு தமிழ்நாடன் கவிதையைமுற்போக்குஎன்பது, எந்தஅடிப்படையில் என்று கேட்டால் இவர்கள் பதில் சொல்ல வேண்டாமா. தமிழ்நாடன் சிவப்பு முகாமைச் சேர்ந்தவன்— இதுதான் அடிப்படை என்பதுதான் பதிலா. வைத்தீஸ்வரன் 'மைலாய் வீதி' கவிதையை பிற்போக்கு என்று சொல்லிவிட்டு மு. மேத்தாவின் 'சமாதானம்' கவிதையை முற்போக்கு என்பது எந்த அடிப்படையில்? ஒரு தோழர் வியட்நாமில் கேட்பது வேதனைப் பாடல்கள் மட்டும்தானா. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மரண அடிகொடுத்து வரும் வீரம் செறிந்த வியட்நாமியர்களின் போராட்டத்தில் மு. மேத்தாவுக்குத்தென்பட்டது. வெறும் வேதனைப் பாடல்கள் மட்டும்தானா, வெற்றிகீதங்கள் தென்படவில்லையா. இதை மட்டும் எப்படி முற்போக்கு என்று சொல்ல முடியும். என்று கேட்டால் என்னபதில் சொல்லுவார்கள். இதற்கும் மேலே சொன்ன முகாம் பிரிவுதான் பதிலா.

இதெல்லாம் சும்மா உதாரணங்களுக்குத்தான். இப்படி இவர்களிடம் நிறைய, ஆனால் இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? இன்றைய முற்போக்காளர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் யாரும் கவிதையை வைத்து கவிதை தரும்பொருளை வைத்து எதையும் விமர்சனம் செய்வது கிடையாது. கவிதையை எழுதியவன்யார், அவன் சிவப்பு முகாமைச் சேர்ந்தவனா, சிவப்பு முகாமைச் சேராதவனா என்பதை வைத்தே கவிதையை விமர்சனம் செய்கிறார்கள். சிவப்பு முகாமைச் சேர்ந்தவனானால் அது முற்போக்கு, இல்லாவிட்டால் அது பிற்போக்கு என்று தங்களுக்குத்தாங்களே மயங்கி அதையே நடைமுறையாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் மார்க்ஸீயம் சொல்லுவது அது இல்லை. சமூக வாழ்வின் பாதிப்பு கவிஞனை பாடவைக்கிறது. கவிதை பிறக்கிறது. இப்படிப் பிறக்கிற கவிதையைஅதன் பொருளை வைத்துத்தான் விமர்சிக்க வேண்டுமே யொழிய அந்தக் கவிதையை எழுதிய கவிஞன் மார்க்ஸீயத்தை ஏற்றுக் கொண்டவனாக இல்லையா என்பதை வைத்து அல்ல. ஏனென்றால் மாக்ஸீயத்தை ஒருவன் சிந்தனை அளவில் ஏற்றுக் கொண்டான் என்பதினாலேயே அவன் எழுதுகிற கவிதைகள் எல்லாமே முற்போக்காகிவிடும் என்பது அர்த்தம் இல்லை. அதேபோல மார்க்ஸீயத்தை ஒருவன் ஏற்றுக்கொள்ளவில்லை. என்பதனாலேயே அவன் கவிதைகள் எல்லாமே பிற்போக்காகிவிடும் என்றும் அர்த்தம் இல்லை. மார்க்ஸீயத்தை சிந்தனை அளவில் ஏற்றுக் கொண்ட ஒருவன் நடைமுறையில் தவறு செய்யலாம். மார்க்ஸீயத்தை சிந்தனை அளவில் ஏற்றுக் கொள்ளாத ஒருவன் நடைமுறையில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிஸ்டுக்குரிய குணாம்சங்களோடு இருக்கலாம். ஏனென்றால் மார்க்ஸிஸம் என்பது ஒரு சிருஷ்டிகரமான சித்தாந்தம். மாறிக் கொண்டு வரும் சூழலுக்கு ஏற்ப, எந்த அளவுக்கு அதை நடை முறையோடு பொருத்தமுறச் செய்கிறோமோ அந்த அளவுக்கே அதன் வெற்றி. இதெல்லாம் அன்றாடம் நம் வாழ்வில்காணும் உண்மைகள்.

ஆகவே, கவிதைகளை முகாம் அடிப்படையில் விமர்சனம் செய்யாதீர்கள். ஏனென்றால் தமது முகாமுக்கு அப்பாற்பட்டவர்களிடமிருந்தும்நமக்கு ஏற்புடைய கருத்துக்கள் பிறக்கும் நம்மோடிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பவர்களிடமிருந்து நமக்கு எதிரிடையான கருத்துக்கள் பிறக்கும். ஆகவே இதை தயவு தாட்சண்யமின்றி விமர்சித்து சரிப்படுத்திக் கொள்ளவும், எதிர் முகாம் என்று கருதிக் கொண்டிருப்பவர்களிடமிருந்தும் பிறக்கும் முற்போக்குக் கருத்துக்களை விசாலமான மனசோடு ஏற்றுக் கொள்ளவும் எப்போதும் தயாராக இருங்கள்.

அதோடு உங்கள் எதிர் முகாம் என்று நீங்கள் கருதிக்கொண்டிருப்பவர்களிடமிருந்தும் கவிதை சம்பந்தமாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை நிறைய உண்டு. ஏனென்றால் எந்த நாட்டிலும் 'பாட்டாளி வர்க்கத்தில்' நேரே ஆகாயத்திலிருந்து வந்து குதித்ததாகச் சரித்திரம் இல்லை. எந்த நாட்டிலும் பூர்ஷ்வாக்கலையின் சகல வடிவங்களையும் தனதாக்கிக் கொண்டு தன்னுடைய உள்ளடக்கத்திற்கேற்ப மாற்றி வளர்த்துக் கொண்டதாகத்தான் பாட்டாளி வர்க்கக் கலையின் சரித்திரம். ஏனென்றால் என்றுமே இல்லாததிலிருந்து ஒன்றும் செய்ய முடியாது. பழமையிலிருந்துதான் புதுமை. ஆகவே இதில் கூச்சப் படவோ, முரண்டுபண்ணவோ, வீராப்புக் காட்டவோ எதுவுமில்லை. ஆகவே அதையும் தைரியத்தோடு ஏற்றுக் கொள்ள முன் வாருங்கள். முதலில் கற்றுக் கொள்ளுங்கள் அப்புறம் நீங்கள் சிருஷ்டிப்பீர்கள். 'சகல விதமான சாதனைகளும் நிறைவான போராட்டங்களின் உலைக்களங்களிலிருந்தே எழுகின்றன' என்று சொன்னவர் தோழர் மாசேதுங் தான். ஆகவே கடுமையாக உழையுங்கள். அந்த உழைப்பு உங்களுக்கு அனுபவத்தைத் தரும். அந்த அனுபவம் உங்கள் கவிதைகளை செழுமை பெறச் செய்யும்.

அதோடு இன்றைய முற்போக்காளர் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரளும்போது நடைமுறைச் சிக்கல்களையுத்தேசித்து நெளிவு, சுளிவோடு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பலவுண்டு. யாரும் லட்சிய நோக்கோடுதான் ஸ்தாபனங்களையும் கட்டுகிறார்கள். கட்டுகிற ஸ்தாபனம் அந்த லட்சியத்தை அடைய ஒரு மார்க்கமும் வேண்டும் அதாவது தற்போதுள்ள சூழலில் தன் ஸ்தாபனம் வகிக்கும் அங்கம் என்ன? தன் எதிரியின் பலம் பலவீனம் என்ன? எந்தெந்த நேசசக்திகளை எந்தெந்த அடிப்படையில் இணை சேர்த்து எதிரியோடு மோதுவது, இப்படி எவ்வளவோ — இந்த நெளிவு சுளிவுகள் சாதாரணக் கவிஞனுக்கிருந்தால் பரவாயில்லை. தன்னை ஒரு முற்போக்கு என்று சொல்லிக் கொள்கிற கவிஞனுக்கு அவசியம் தேவை.

அந்த அடிப்படையில் இப்போதைய நம் தமிழ்க் கவிதையுலகில் நாம் முதலில் எதிர்க்க வேண்டிய போக்கு எதை. இந்த அமைப்பை நியாயப் படுத்துகிற இந்த அமைப்போடே தம்மை இணக்கம் காணவைத்து, மாறுதலுக்கான நம் இயக்கங்களைக் கட்டிப் போடவைக்க முயல்கிற, இந்த அமைப்புக்கு எதிர் நடவடிக்கையே வேண்டாம் என்று இந்த அமைப்புக்கு துதி பாடுகிற போக்கைதான்.

இதுதான் நமக்கு இப்போதிருக்கும் மிகப்பெரிய, பெரும்பான்மை மக்களிடையே அதிகமாக செல்வாக்கு வகிக்கிற எதிரி. இதை எதிர்ப்பதே நம்முடைய முதல் வேலை, அப்படி இருக்கும் போது இந்த சமூக அமைப்பில் திருப்தியற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இணக்கம் காண முடியாத, இந்த அமைப்பில்சந்தேகமுறுகிறசகலசக்திகளையும் நாம் தற்காலிகமாக அணி சேர்த்துக் கொள்கிறோம் எதற்காக இந்த அமைப்பை அதை நியாயப் படுத்தும் சக்திகளை எதிர்ப்பதற்காக' இதை விட்டு— நம் பிரதான எதிரியை விட்டு — நாம் நம்முடைய தற்காலிக நேச சக்திகளோடு சண்டையிட்டுக் கொண்டிருப்பது எந்த வகையிலும் பொருத்தம் இல்லாதது. இது நம் லட்சியத்தையும் முன்னேக்கி உந்தித்தள்ளாது. 4 லட்சம் 5 லட்சம் என்று ஓடும் குமுதம், விகடன், தினமணிக்கதிரை விட்டு 800,1000 ஓடும் 'கசடதபற' 'பிரக்ஞை'யை எதிர்ப்பது எந்த வகையில் நடைமுறை பிசகானதோ அதே மாதிரித்தான். நாட்டில் மலிந்து போயிருக்கும் பண்டித சிகாமணிகளின் சொல்லடுக்குகளையும் ஆளும் வர்க்க அடிவருடிகளின் கவிதைகளையும் விட்டு 500, 1000 வெளியான 'அன்று வேறு கிழமை'யையும் 'கண்ணுடியுள்ளிருந்து'வையும் எதிர்த்து வம்பு பண்ணிக் கொண்டிருப்பதும் எந்த வகையிலும் புத்திசாலித்தனமானதாக ஆக முடியாது.

அதோடு நாம் அடிக்கடி ரொம்ப முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லுவது நமது கொள்கைகளை ஒரு கவிதை பிரகடனப் படுத்தவில்லைஎன்பதற்காகவே ஒரு கவிதையை பிற்போக்கு என்று சொல்லி விட முடியாது. நமது கொள்கைக்கு அது எந்த வகையில் எதிரியாயிருக்கிறது என்று பார்த்து, எதிராகப் போகாத எதையும் உங்கள் நேச சக்தியாகவே பாருங்கள் என்பதுதான்: ஞானக் கூத்தனின் ஸ்ரீலஸ்ரீ, அம்மாவின் பொய்கள், சைக்கிள், கமலம், பரிசில் வாழ்க்கை விட்டுப் போன நரி, விடுமுறை தரும்பூதம், நாள், காலவழுவமைதி நாயகம், பிரமில் பானுசெந்நரனின் குருக்ஷேத்ரம், கலப்பு, விடிவு, அற்புதம், தாசி, ராமன் இழந்த சூர்ப்பனகை.பாலை இவைகளையெல்லாம் மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள். இவைகள் நமக்கு எந்த வகையில் எதிரானதாயிருக்கிறது சிந்தித்து உங்கள் நடைமுறையை மாற்றிக் கொள்ளுங்கள்.

ஒரு விஷயம் இவ்வளவு சொல்லி இந்த அளவோடே நாம் இந்தக் கட்டுரையை முடிப்போமானுல் இன்றைய முற்போக்குக் கவிஞர் என்று தம்மைச் சொல்லிக் கொள்கிறவர்களை நாம் ஒருபக்கப் பார்வையாக அதாவது அவர்களது குறைகளை மட்டுமே பார்த்தவர்களாவோம்.

நமக்குத் தெரியும் நம் தமிழ்க் கவிதைக்கு ஒரு ரெண்டாயிரம் வருஷ காலத்து மரபு இருக்கும். இந்த ரெண்டாயிரம் வருஷகாலத்து மரபும் எதைப்பாடி வந்திருக்கிறது என்பதும் நமக்குத் தெரியும். தொடர்ந்து ஏற்பட்ட விஞ்ஞான சமூக மாற்றங்களில் இப்போது சமுதாயத்தில் தன் நிலையை உணர்ந்து போராடக்கூடிய புதியதொரு சக்தி கிளைத்து எழுந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. கூடவே கவிதையுலகையும் பாதித்துக் கொண்டு வந்திருக்கிறது. ஆனுல் இதற்கென்று சொந்தமான கலைகள் இலக்கியங்கள் இல்லை. ஆகவே இது வளரும் தன் சக்திக்கேற்ப கலை இலக்கிய உலகைப்பாதித்துதனக்கென்றுசொந்தமான கலைகள் இலக்கியங்கள் கவிதைகளை உருவாக்கிக் கொள்ளும். இதுதான் வளர்ந்து கொண்டு வரும் இந்தப் புதிய சக்தியின் கலை, இலக்கியமாகப் போகிற பாட்டாளிவர்க்கக் கலை, இப்படிப்பட்ட ஒரு சூழலில் வளர்ந்து வரும் இப்புதிய சக்திகளை, அது இந்த சமுதாயத்தில் ஆற்றும் முக்கிய பங்கை, அதன் மாறுதல்களைக் கவனிக்காமல் ஆளும் வர்க்கக் கைக்கூலிகளாகி காசுக்காகவே எழுதி சோரம் போய் 'கவிஞர்' பட்டம் பெற்றுக் கொள்கிறவர்களும், நான் உண்மையைத் தேடுகிறேன், எனக்காகவே எழுதுகிறேன்என்று தங்களை அறியாமலேயே தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் துரோகம் செய்து கொள்கிறவர்களும் நிறைந்த ஒரு சூழலில் துணிச்சலோடு முன்வந்து நாங்கள் முற்போக்குகள் மக்கள் கவிஞர்கள் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவே நாங்கள் பாடவந்திருக்கிறோம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைப் பிரகடனப் படுத்தி முற்போக்குக்கருத்துக்களை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில் இவர்கள் ஞாபகத்துக்கு உரியவர்கள். இவர்கள் வளராமல் இல்லை. கொள்கையிலும் சரி கவிதையிலும் சரி இவர்களின் தொடக்க காலக் கவிதைகளுக்கும் இப்போதைய கவிதைகளுக்கும் எவ்வளவோ மாறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அந்த மாறுபாடுகள் வாழ்க்கையின்மேல் மேலும் திட்சண்யம் பெற்றதாக தங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் வாழ்க்கையின் மூலம் எடுத்துக் காட்டுவதாக இல்லையே என்பதுதான் எண்ணிக்கை பெருகின அளவுக்குக் கவித்வ பெருகவில்லையே என்பதுதான் குறை. இந்தக் றைகள் நீங்கும் போது இவர்களிடமும் கவிதை செழிக்கும்.

அப்புறம் இந்தக் கட்டுரையோடு நேரடியாகச் சம்பந்தமில்லாத பின் குறிப்பாகத், தரப்பட வேண்டிய ஒன்று. இங்கே முற்போக்கு என்று உபயோகப் படுத்தியுள்ள வார்த்தைகள் எல்லாம் சாராம்சத்தில் அதன் 'புரட்சிகர' என்ற அர்த்தத்தில்தான் இன்றைய முற்போக்காளர்கள் எல்லாம் தங்களை முற்போக்கு என்று சொல்லிக் கொள்வதோடு தாங்கள் சிகப்பு அணியைச் சேர்ந்தவர்கள் என்றும் பகிரங்கப்படுத்திக் கொள்வதால் அந்த சிகப்பு அணியினருக்குத் தேவையான 'புரட்சிகரப் பார்வை'' என்ற நோக்கோடே இன்றைய முற்போக்காளர் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களைப் பார்க்க வேண்டியுள்ளது. சொல்லப் போனால் 'புரட்சிகர' 'முற்போக்கு' என்பதெல்லாம் ஒருவார்த்தை சௌகரியங்களுக்காகத்தான். இரண்டுக்கும் மிகப் பெரிய வித்தியாசங்கள் இல்லாமலும் இல்லை. இன்றைய கால சூழலில் இந்தச் சமூக அமைப்போடு இணங்கி அதை நியாயம் என்பதாக மயங்கி, அந்த நியாயத்துக்கு வக்காலத்து வாங்குபவன் 'பிற்போக்கு' இந்த அமைப்பின் சந்தேகமுறுகிற, நம்பிக்கையிழக்கிற, அலுப்படைந்த இந்தச் சமூக அமைப்போடு இணங்க மறுக்கின்றவன் மேலே சொன்னவனை நோக்க கொஞ்சம் முற்போக்கு. இணங்க மறுப்பதோடு அதை எதிர்க்க முனைபவன் இணங்க மறுப்பவனை நோக்க 'முற்போக்கு' எதிர்க்க முனைந்து அதனால் உத்வேகமூட்டப்பட்டு தன் தனித்த ஒருவனால் மட்டும் அது சாத்தியமில்லை என்று உணர்ந்து இந்த சமூக அமைப்பை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் முன்னணியிலேயே நிற்கும் தொழிலாளி வர்க்கத் தலைமையை ஏற்று அதனோடு தன்னை தோள் சேர்த்துக் கொண்டு அதன் மாறுதலுக்காக உழைப்பவன் அவனைவிடவும் முற்போக்கு. இவனையே நாம் 'புரட்சிகர' என்று அழைக்கிறோம். ஆனால் வார்த்தைகளுக்கு அர்த்தங்களை நிர்ணயம் செய்வது காலங்கள். ஏனென்றால் முன்னே முற்போக்கு என்பவன் இப்போ பிற்போக்கு ஆகலாம். இப்போ முற்போக்கு என்று அழைக்கப் படுபவன் நாளை பிற்போக்காகவோ புரட்சிகரமாகவோ மாறலாம். ஆக இன்றைய காலச்சூழல் ஒரு மக்கள் ஜனநாயக முன்னணியின் தேவையாக இருப்பதால் புரட்சிகர என்ற வார்த்தையைப் பிரயோகம் செய்யாமல், நம் அணியை விசாலப் படுத்தி முற்போக்கு என்ற வார்த்தையை பிரயோகம் செய்கிறோம். இந்த அணி இந்த சமூக அமைப்பை அம்பலப்படுத்துகிற, அதில் இணக்கம் காண மறுக்கிற எதிர்க்கிற, மாற்றம் வேண்டுகிற சகல முற்போக்குச் சக்திகளும் தொழிலாளி வர்க்கத் தலைமையை ஏற்றுக் கொண்ட புரட்சிகர சக்திகளும் உள்ளடங்கியதாகத்தான் இப்போதைய முற்போக்கு என்பது இருக்கும். காலம் இவைகளை அணி சேர்க்கும். பிரிக்கும் வார்த்தைகளைக் கூர்மைப் படுத்தும், அர்த்தம் கற்பிக்கும். ஆகவே இன்றைய முற்போக்கு எது என்பதை உணர்ந்து தன்நேச சக்திகளை திரட்டி தன்னைப் பலப் படுத்திக் கொள்வதாகவும் தன் எதிரியை எதிர்த்த போராட்டத்துக்கு அதைத்தயார் படுத்திக் கொள்வதாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் நம் யோசனை.

கடைசியாக ஒன்று. இவ்வளவு சொல்லியும் இந்த விமர்சனங்களை ஏற்று தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நடை முறையை செப்பனிட்டுக் கொள்ளாமல் அல்லது நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் நமது விமர்சனங்களைத் தத்துவபூர்வமாகவும் மறுக்காமல் வாய்மூடி மௌனிகளாக இருப்பதோ அல்லது இப்படிப்பட்ட விமர்சனங்களை சும்மா வெறுமனே திருத்தல்வாதிகள், சந்தர்ப்பவாதிகள், எதிர் வர்க்கத்துக்கு வால்பிடிப்பவர்கள் என்றுமுணுமுணுத்து நாங்களோ மக்கள் கவிஞர்கள் சூரிய, சந்திர நட்சத்திர, ராக்ஷஸ, ஸௌந்தர்யங்களை விடமாட்டோம். விடியல் கீதங்கள்தான் பாடுவோம். புரட்சிப் பஜனைகள்தான் செய்வோம் என்று இதற்கு ஜால்ரா தட்டுபவர்களெல்லாம், முற்போக்கு மற்றவர்களெல்லாம் பிற்போக்கு என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருப்பார்களேயானால் நாம் இவர்களுக்கு ரொம்ப அன்போடு சொல்லிக் கொள்வது ஒன்று உண்டு.

நிஜமாகவே உங்களுக்கு மக்கள் போராட்டங்களிலே நம்பிக்கையிருந்து அவர்களுக்காகவே பாடவேண்டும் என்று விரும்புவீர்களேயானால் தயவு செய்து உங்கள் அக்னி வீணைகளையும், ரத்தபுஷ்பங்களையும் எடுத்து ஏரவாணத்திலே சொருகிவிட்டு, சினிமாமெட்டில் இயக்கப்பாடல்கள் எழுதப் போங்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் உங்கள் கவிதைகளைக் காட்டிலும் தொழிலாளர்களுக்கு அது எவ்வளவோ பயனுள்ளதாயிருக்கும். ஆனால் அதற்குக் கூட கொஞ்சம் வாழ்க்கை அனுபவமும் உத்வேகமும் தேவைப்படுகிறதே என்பதுதான், யோசனை.

நன்றி—'பிரக்ஞை'
(தமிழ்நாடு)
ஏப்ரல் — மே 1975.

---

## ருவான்வெலிசய

வெளியை நிறைத்த
வெண்குவி வளைவு
வானந் தடவுகிற
சுருள்முடி.

நீலத் திரைவானம்
இடையிடையேஓடும், சில மேகம்

அடிவயிற் றெழுமோர்
நீண்ட பரவசம்
திடீரென,
மானிடத்தின் பிரமாண்டம்!

## 'உயிர்' வாழுதல்

உயிர்தடவி வருங்காற்று;
துயர்விழுங்க விரிந்தகடல்
கடலின்மேற் படர்ந்த வெளி
ஒளிபரவக் காலைஎழ,
நிறைவின்பூரணம்
இக்கணத்தில் இறப்பேது... ?

அ. யேசுராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகள் காத்திருக்கின்றனர்

''கோரப்புயல் விளைத்து விட்ட அனர்த்தம்........

கடலில் உயிர் பிரிந்த உடலங்கள்.....

கரையில் ஓ! வென்று கதறியளும் பெண்கள் பிள்ளைகள்......

விறுவிறுப்பான சம்பவங்கள் கொண்ட ஓர் சமூக நாவல்.'' என்று 'வீரகேசரி' யால் மகுடம் புனையப்பட்ட இந் நாவல் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் 'பாஷையூர், என்ற (பாஷையூர் என நாவலின் எவ்விடத்திலும் குறிப்பிடாதிருப்பினும் விபரணங்களைக் கொண்டு இவ்வாறு ஊகிக்கலாம்.) கடலோரக் கிராமத்து மக்களின் வாழ்க்கை முறையை, கோரப் புயலுடன் ஆரம்பித்து, அம்மக்களின் வீர உணர்வுடன், தொழில் முறைகள், சம்பிரதாயங்கள், ஆகியன தழுவி, இனக்கலவரத் தெறிப்புடன் முடிவுறுகிறது.

எடுத்துக் கொண்ட மீனவக் களத்தை கூடியவரை யதார்த்தமாக சித்திரிக்கும் முனைப்பில், அப்பிரதேசத்தையும், மக்களின் தொழில் முறைகளையும், அவற்றிற்கே தனித்துவமான சொற்களையும் கையாண்டு அக் களப் பின்னணியை எழுப்பியிருப்பது பாராட்டிற்குரியதே. ஆயினும் பெறப்பட்ட தரவுகளை அல்லது அனுபவித்த அனுபவங்களையெல்லாம் ஒரேயடியாக இந் நாவலுள் செலுத்திவிடும் அவசரமும், கட்டுக்கோப்பின்றி திசை மாறும் சம்பவங்களும் செயற்கைத் தன்மை வாய்ந்த பிற்சேர்க்கையும் நாவலின் சிதைவிற்குக் காரணமாக அமைந்து விடுகிறது. சந்தியா, முத்துராசன், அலஸ் போன்ற முக்கிய பாத்திரங்கள் முழுமை பெறுத பாத்திரங்களாக மனதில் நிற்க முடியாமல் போய் விடுகின்றன. ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த 'சந்தியாவின் பாத்திரம் பிற்பகுதிகளில் இறுக்கமற்றுத் தொய்ந்து போய் விடுகிறது. முத்துராசன் அலஸ் ஆகியோரும் நாவலின் பிற்பகுதிகளில் வேறு வேறு தோற்றங்கள் கொள்கிறார்கள் ''பாத்திரங்களின் உணர்ச்சிகளையோ, உணர்ச்சி மோதல்களையோ, சிந்தனைகளையோ. ஒளியாமல் அப்படியே தீட்டி விடுவதல்ல நாவல். இவ்வுணர்ச்சிகளும் சிந்தனைகளும் எந்தச் சந்தர்ப்பத்திலே எப்படித் தோன்றுகின்றன; அவற்றைத் தோற்றுவிக்கும் வாழ்க்கை நிலை யாது? அந்த வாழ்க்கை நிலைக்கும் குறிப்பிட்ட பாத்திரத்தின் குண வளர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? அக் குணங்களினால் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப் படுகிறது என்பவற்றையெல்லாம் அடக்கியமைத்து கோடிட்டுக் காட்டும் பொழுதுதான் முழு மனிதனை நாம் உணர முடிகிறது'' .(க.கை.'நீதியே நீ கேள்' முன்னுரை)

''மக்களின் இயல்பான வாழ்க்கை மொழியை சித்தரித்து அவர்களால் பேசப் படும் வழக்கு மொழியையே தமிழ் என ஏற்று இலக்கியம் செய்கிறேன்'' எனக் கூறிய நாவலாசிரியர். நாவலின் பெரும் பகுதிகளில் பேச்சு வழக்கை சரியாக வெளிக் கொணரத் தவறி விட்டார் என நினைக்கிறேன். உதாரணத்திற்கு,

''அவர்கள் பத்திரமாக இரணதீவுக் கரையில் இருக்கிறார்கள்.'' ''அவர்கள் மகளைப் பயணம் அனுப்புறத்துக்கு றயில் ஸ்டேசனுக்கு போட்டாக.''

போன்றவைகளை குறிப்பிடலாம். எந்தப் பாத்திரமும் மனவுணர்வாகச் சிந்திக்கும் பொழுது கூட தனது பேச்சு வழக்கிலேயே சிந்திக்கும் ஆனால் சந்தியாக்கிழவன் புயலில் காணமல் போனவர்களைப் பற்றி தனது அனுபவக் கணிப்பீட்டை கூறும் பகுதி, ''முந்தாநாள் மூன்று மணிவரையில் தான்... பக்கம்-13. ''யாராவது ஒருத்தியை பிடித்து அவனுக்கு மெய்விவாகம் செய்து வைத்து விட்டாள்'' என்பனவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களெல்லாம் எந்த அளவுக்கு பேச்சு மொழியுடன் இணைந்து வருகிறது?

இந் நாவலில் ஆசிரியர் சில பாத்திரங்களின் சம்பவங்கள் மூலமாக என்ன உணர்ச்சியை படிப்போருக்கு தோற்ற வைக்க முனைந்தாரோ அவைகளெல்லாம் வலுவற்றுப் போனதாகவே தோன்றுகிறது. ''இலேசாக தார் தெளிக்கப் பட்ட கல்லுவிரிப்பிலே மண்டாவின் கூர் முனைகளைத் தேய்த்துத் தேய்த்து, உரசி உரசி, கூர்பார்த்துப் பார்த்து, முதுமை கண்டு நடுங்கிக் கொண்டிருந்த கைவிரல்களை வருடி வருடி, வரிசைப் படுத்தி இருளை ஊடறுத்து மேற்கு நோக்கி மேற்கு நோக்கி, கிழக்கு நோக்கி கிழக்கு நோக்கி, தெற்கு நோக்கி, தெற்கு நோக்கி'' ...

''முத்துராசன் தலைதூக்க முடியாத மது வெறியில் வந்தான்''

''வரோணிக்காவின் உடம்பெல்லாம் ஓர் உணர்ச்சி வெறிநாய் போல் ஓடிப் பரவியது. அவள் மரமாய் நின்றாள்''.

என்பன போன்ற வரிகளும், எழுப்ப முயன்ற உணர்ச்சியை வெளிக் கொணர முடியாமல் வலுவற்றுப் போனதை அவதானிக்கலாம்.

ஆசிரியர் இந் நாவலை யதார்த்த பூர்வமாகப் படைக்க முயன்றும் சில கடற்தொழில் முறைகளை யதார்த்த பூர்வமாக படைக்க முடியாமல் போய்விட்டது.

''வெளிவலையோடு உரசி உரசி நகர்ந்து வந்து பட்டி வலைக்குள் புகுந்து விட்ட பாரை மீனொன்று துள்ளிக் குதித்துச் சிறகடித்து மரணத் துடிப்புத் துடிக்கிறது'' களங்கட்டியில் பட்டி வலைக்குள் புகுந்து விட்ட மீன் சாகாமல் எவ்வளவு நாட்களும் பட்டி வலைக்குள் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டேயிருக்கும், 'கடிப்பு வலை'யைப் போட்டு வலை இழுக்கு முன்னர் மரணப் போராட்டம் நடத்துவதும், பௌர்ணமி கழிந்து இரண்டாம் நாள் மணி ஒன்பதாகியும் நிலவு வரவில்லை என்பதும் யதார்த்த உண்மைகளுக்கு முரணானதாகும். பௌர்ணமி வந்து இரண்டாம் நாளெனில் இரவு ஏழரைக்கு சற்று முன் பின்னாக நிலவு வந்து விடும்.

டானியல் தத்துவ ரீதியாக மாக்ஸீயத்தை ஏற்றுக் கொண்டவர். சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது, ஒரு மாக்ஸியவாதி, 'முரண்பாடுகள் கூர்மையடைகிற பொழுது போராட்டங்கள் எழுவது தவிர்க்கமுடியாததே. போராட்டங்களின் விளைவாக இதுவரை ஒப்புக் கொள்ளப் பட்ட சமூகச் சம்பிரதாயங்கள் மாற்றமடைய புதிய சம்பிரதாயங்கள் தோன்றுகின்றன. புதியன யாவும் கடுமையான வன்மையான போராட்டங்களினூல் தான் உருவாக்கப் படுகின்றன என்ற பின்னணியில்தான் சிந்திக்க முடியும்'. 'நாவலில் சபை சந்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி குறிப்பிடும் பொழுது ''காலம் தான் யாரையும் கேட்காமல் எல்லாவற்றையும் இனம் பார்க்காமல் வாரி அடித்துக் கொண்டு போய் விடுகிறதே'' என்று கூறுவது அவர் நம்பும் த்த்துவத்தின் அடித்தளத்தையே பெயர்ப்பதாக இருக்கிறது' ஈழத்தின் தரமான படைப்பாளி எனசிலரால் சொல்லப்படும் ஆசிரியரிடம் மேற் சொன்ன தவறுகளும், முரண்பாடுகளும், இடம் பெற்றமைக்கு ''சாதி என்ற பிரச்சினையை விட்டுவிட்டால் இந்த எழுத்தாளர்களுக்குவேறு கெதியில்லை என்ற கேலி கலந்த குற்றச் சாட்டு நீண்டகாலமாக ஒரு பிரிவு எழுத்தாளர்கள் மேல் சுமத்தப் பட்டு வந்துள்ளது. இதை ஒரு குற்றமாக எடுக்காவிட்டாலும் சாதிப்பிரச்சினையற்ற ஏனைய மக்களின் வாழ்க்கை முறையோடமைந்த கருப்பொருளையும் இவர்களால் எடுத்தாள முடியும் என்பதையும் துணிவுடன் சொல்வது அவசியமாகிறது''. என்ற கூற்றின் சவாலை ஏற்க முனைந்து அதற்காக ஒரு புதிய களத்தை தேர்ந்தெடுத்து பெறப்பட்ட அனுபவங்களையும், சரவுகளையும் ஒரேயடியாக செலுத்த முயன்றதும் காரணமாக இருக்கலாம். எப்படி இருந்த போதிலும் வீரகேசரி என்ற பெரிய ஸ்தாபனம் ஈழத்தில் உருவாக்கிய வாசகர்களுக்கு இந்நூல்சுவைபயப்பதாகும். வெற்றியடைந்தது என்னவோ வீரகேசரிதான்!.

—பாலைவனத்தின் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தாகம்'

## தமிழ் சினிமாவில் ஒரு துணிகர முயற்சி



— எஸ். வில்வரத்தினம்

எமது நாட்டின் தரமிக்க சில சிங்களப் படங்களையேனும் பார்த்துரசிக்கும் எமக்கு, நீண்ட கால அனுபவமுள்ள தமிழ்த் திரை உலகில் இருந்து கலாபூர்வமான படைப்பேதும், சமீபத்தில் வெளிவராதா என்றொரு]தணியாததாகம்' தாகம்' என்ற தமிழ்த் திரை ஒவியம் அந்தத் தாகத்தை தணித்தது. (திரைஓவியம் என்றது இங்கு அர்த்த புஷ்டியுடன் - அது ஏற்படுத்திய பாதிப்பு ஓவியப் பதிவு போன்றதால்) விரல் விட்டு எண்ணக் கூடியதாய் தரத்துடன் வெளிவந்த படங்களில், (ஜெயகாந்தனின் 'உன்னைப்போல் ஒருவன்' 'யாருக்காக அழுதான்' போன்றவை) இதுவும் ஒன்று. என்னைப்பொறுத்த வரையில் ஜெயகாந்தனின் 'யாருக்காக அழுதானை' விடவும் ('உன்னைப்போல் ஒருவன்' பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. திரைப் படக் கூட்டுத்தாபனம் ஏன் அந்த வாய்ப்பை எமக்கு அளிக்கக் கூடாது?) கலைப் பெறுமானத்தில் 'தாகம்' உயர்ந்தது. ஆனால் தமிழ்ப் படங்களின் 'மாமூல்' சம்பவங்களையே, அரைத்தமா விவகாரங்களையே எதிர்பார்த்திருந்த எமது தமிழ் ரசிக கோடிகளுக்கு இது. ஓர் ஏமாற்றமே. பட மாளிகையில் அதைப் பார்த்துக் கொண்டிருந்த போது அவர்கள் விளைத்த, கூச்சலும் கும்மாளமும், நாச நிசா போன்ற தரமிக்க படங்களிற்குசிங்களரசிகர்கள் காட்டியபொறுமை மிக்க ரசனையோடு இவர்களதை ஒப்பிடும் போது, யாரோ கூறியது போல் 'ஒ...... பெரிய அந்தகாரமே விரிகிறது' தரமிக்க ஒரு ரசிகர் சொன்னது போல் நமது ரசிகர்கள் 'தாகம்' போன்ற தரமான கலைப் படைப்பை ரசிக்க நாலைந்து தரமான சிங்களப் படங்களையாகிலும் பார்த்திருக்க வேண்டும். அப்போதுதான் நம்மவர்களது ரசனை உணர்வு வளரும்.

கதை:

நகர்ப் புறத்தில் வறுமை தந்த சீரழிவுக் காட்சிகளை கண்ணில் நிறுத்திக் காட்டியவாறு ஒரு கிராமத்தின் காந்திய ஆசிரமத்துள் நுழைகிறது கதை. அவ்வாச்சிரமத்தின் அனாதைக் குழந்தைகளாக புகலிடம்கொண்டுவளர்ந்தவர்கள்கதாநாயகனை பிறவிக் குருடன் சேகரும், கதாநாயகிசாரதாவும். ஆசிரமத்தின் சகல பணிகளையும் சிரிய முறையில் ஆற்றி தலைவியின் நன்மதிப்பைப் பெறும் சாரதாவை, சாந்திநிகேதனிலிருந்து ஆசிரமத்துக்கு விஜயம் செய்யும்வங்காளிஒருவர் மணக்கப்பிரியப்படல் வேண்டுகோளை மறுத்துவிடுகிறாள் சாரதா அதேவகையான வேண்டுகோளை சிறுவயதுமுதல்ஒன்றாகப்பழகியசேகர் தயக்கத்துடன் வெளியிடும் போது, முதலில் தயங்கினாலும் பின்னர் ஏற்றுக் கொள்கிறாள். ஆசிரமத்தை விட்டு உழைப்பை நாடி நகருக்குச் செல்கின்றனர் இருவரும். பற்பல தொல்லைகள், காம விகாரிகளின் இடைஞ்சல்கள் இவற்றை சமாளித்து கணவனை போஷிக்கும் அவள் மீதே சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் சந்தேகப் படுகிறான் சேகர் என்பது, சாரதாவுக்கு தெரிய வருகிறது. அவள் உள் வெதும்புகிறாள். இதற்கிடையில் கணவனும் காரில் மோதிக் காயப்பட, விரக்தியினால் மீண்டும் பழைய கிராமத்துக்கே இருவரும் திரும்பிய பின் உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும் தறுவாயில் சாரதா, தனது கண்களை சேகருக்கு தானம் பண்ணிவிட்டு இறந்து போகிறாள். இதுதான் கதை.

சாதாரண காதல் கதை போல மேற் தோற்றம் தந்தாலும் காந்திய தத்துவ நோக்கில் பார்க்கும் போது அதன் அர்த்தம் விரிவு பெறுகிறது. ஆனால் அது காதல் கதையாகவும் அருமையாக அமைந்துள்ளது.

ஆனால் இங்கு எனது விமர்சனம் காந்திய தத்துவ நோக்கிலேயே அமைகிறது. காந்திய ஆசிரமத்தில் வளரும் மூன்று பாத்திரங்களை அந் நோக்கிலே பார்ப்போம். காந்திய ஆசிரமத்தில் வளர்ந்த போதும் வெறும் நகர நாகரிகத்துக்கும் உடல் நல ஆசைக்கும் பலியான பெண். (அவளே பின்னர் வங்காளியை மணந்து கொள்கிறாள்.) இரண்டாவது கிராமத்திலோ நகரத்திலோ தனது மனத் தடைகளை விலக்கி வாழ முடியாத பார்வைத் தெளிவில்லாத குருடன் சேகர், மூன்று காந்திய நெறியில் வாழ்ந்து கிராமத்திலும் நகரத்திலும் மனப்பக்குவத்தோடு வாழத் தலைப்படும் உண்மைத் தியாகி குருடனுக்குக் கண்ணளிக்கும் சாரதா. காந்தியத்தைத் தழுவிக் கொண்டதாகக் கூறப்படும் இந்தியாவில் காணப்படும் மூன்று போக்குகளைக் காட்டுவதாக இது அமையவில்லையா? முதல் பெண் காந்தியம் என்ற பெயரை மட்டும் தழுவி, வெறும் உடற் தளத்தில் வாழ்பவராயிருக்கும் மனிதரைக் காட்ட, கதருடையை மட்டும் தரித்துக் கொண்டு தனது மனத் தடைகளைத் தாண்ட முயலாமல் பிரச்சினைகளைக் கண் திறந்து சந்திக்க முடியாமல், உண்மையான காந்தியத்தையே (அதன் குறியீடான சாரதாவை) விளங்கிக் கொள்ளாமல் சந்தேகிக்கும் இரண்டுங் கெட்ட மனிதரைச் சேகர் காட்ட மேல்குறிப்பிட்ட இருசாராருக்கும் வழி காட்டி தனது வாழ்க்கையையே தியாகம் செய்து கண்ணளிக்கும் ஒரு தலைவியாக தன்னைக் காட்டுகிறாள் சாரதா. (காந்தியின் சிலையும் அதன் கீழுள்ள ஆங்கில வாக்கியம் my life is my message — என்பது அவளுக்குப் பொருந்த படத்தில் காட்டப்படுவது இதில் குறிப்பிடப் பட வேண்டும்)

நெறியாள்கை: மேற் கண்ட மூன்று போக்குகளையும் காட்டி உண்மையான காந்தியம் என்னவென்று காட்ட எடுத்த ஒருபெருமுயற்சி என்ற வகையில், நான் படத்தின் இயக்குநரான சினிமாக் கல்லூரிப்பட்டதாரி 'பாபு நந்தன் கோட்'டைப் பலமாகப் பாராட்டுறேன். காதல் கதையாகவும், காந்தியக் கதையாகவும், தாழ்வுச் சிக்கலை விளக்கிக் காட்டும் மனோவியல் கதையாகவும் அவரவர் கண்ணோட்டத்துக்கு அருமையாகப் பொருந்தக் கூடிய கதையைத் தேர்ந்தெடுத்து, அதை அழகான திரை ஓவியமாக்கியுள்ளது அவரது அற்புத நெறியாள்கைக் கலைத்திறன். ஒவ்வொரு பாத்திரங்களினதும் இயல்புகள், மாற்றங்கள் மிக யதார்த்த பூர்வமாக அவரால் சித்திரிக்கப் படுகின்றன. சேகரினது மனச் சிக்கல் தோன்றும் போதெல்லாம் அவனது நிலையை விளக்க ரயிலின் சப்தத்தையும் ரயிலின் பின்னணிக் காட்சியைக்காட்டுவதும் ('ஒருசாதாரண மனிதனின்சரித்திரத்தில்' நாயகனின் மனச்சிக்கலை காட்ட ரயிலின் சப்தத்தை உவமை காட்டும் மஹாகவியையும் இதில் நினைக்கத்தோன்றுகிறது. காந்தி யந்திரமய நாகரிகத்துக்குரிய குறியீடாக ரயிலைக் குறிப்பிடுவதால் சேகரை அந்தவித நாகரிகத்துக்குரிய குறியீடாகவும் கொள்ளலாம்.) சேகரினதும், சாரதாவினதும் ''சின்ன வயதுச் சிறகடிப்புகள்'' முறையே உறை காட்சி, தெளிகாட்சிகளாகக் காட்டப் படுவதும், முதலில் சேகரை மணக்க மனமின்றி வண்டியில் ஊர் செல்லும் வழியில் சிறு வயது நினைவு வர கண்ணீர் சிந்தி சாரதா ஆசிரமம் மீள்வதும், திரும்பிய வண்டிற் சில் சேகரின் கைராட்டையாய் உழல்வதும் நகரத்தில் உழைக்க வழியற்று கவலைப் படும் சாரதா யன்னல் வழியாய் கயிற்றில் நடக்கும் பெண்ணைக் காண்பதாய் காட்டுவதும், கண் பெற்றதும் சேகர் தன் கைப் பொல்லை நழுவவிடும் இரு பொருள் தரும் நிகழ்வும், இயக்குநரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையை பறைசாற்றுவன. சில வேளை நிசப்தத்தினுல் (படத்தில் நிசப்தம் நிலவ எமது ரசிககோடிகள் இங்கிருந்து குரல் கொடுத்தார்கள்.) வெவேளை அபூர்வசப்தத்திஞலும் கூட அவரது கெறியான்கை விளையாடுகிறது. ஓவிய, கவிதா தன்மை கலந்த கலைப் பாதிப்பை நிகழ்த்தும் அவரது கலைவண்ணத்தை லெஸ்டரின் 'தாசவிசா'விலும் காணலாம். அவரது கலைவண்ணத்துக்கு, பரந்த வெளியும், சிறந்த இயற்கைக் காட்சியும் கைநீட்டி வளைகிறது. அதற்கு உதவிய படப்பிடிப்பாளர் வையத்தரையும் பாராட்டுப் பெறுகிருர்.

நடிப்பு: அடுத்ததாக படத்திற்கு உயிரோட்டம் தருவது சாரதாவாக வரும் சுந்திதா போஸ். இரவல் குரல் எனினும் தனது ஒவ்வொரு அசைவு, எளிமையான முகபாவனையால் அதனை மறக்கச் செய்துவிடுகிருர். வண்டியில் மீண்டும் ஆசிரமம் திரும்பும் போது கண்ணீர் சிந்தும் சோகநிலை, சேகரைக் கல்யாணம் செய்ய சம்மதித்த போது அவன் அங்கங்களின் ஸ்பரிசிப்பின் உணர்வை வெளிப் படுத்தும் இன்பநிலை, எல்லாமே ஓவியம் போல் நெஞ்சில் நிழலாடுகிறது. நடிப்பு என்ற சொல்லை விட ஓவிய உலா என்றுல் பொருந்தும். முத்துராமனும் அதற்கு ஈடுகொடுத்து நடிக்கிருர். சேகர் என்ற பாத்திரத்தின் மனச்சிக்கல், சந்தேகம் ஆகியவற்றை நன்கு வெளிப்படுத்துகிருர். தமிழ்ப்படநாயகநடிகர்களுக்குரிய அதித பாணி இதில் இல்லை. ஏனைய உபபாத்திரங்களாக வருவோரும் தம் பங்கை சரிவரச் செய்துள்ளனர்.

படத்தின் இறுக்கமான கதை அமைப்புக்கு வளவளாவென்று நீளாத சுருக்கமான கவிதைச் செறிவுள்ள உரையாடல் கை கொடுக்கிறது. எம். பி. சிறீனிவாசனின் பின்னணி இசை படத்தின் சிறப்பம்சம். பல இடங்களில் பின்னணி இசை மௌனத்தைத் தந்த உள்ளக் கிளர்வு பாத்திரத்தின் உள்ளக்கிளர்வுடன் ஒன்ற உதவிற்று. உச்சக் கட்டத்தில் நடக்கும் பெண்ணை சாரதா காணும் போது எழுப்பப்படும் நாதஸ்வர ஒலி. ஜேசுதாசின் பாடல் ஒன்றும் பரந்த வெளிக்காட்சியோடொன்றித் தரும் பரவசம்; ஒர உணர்வுகள் .....;

இறுதியாக படம் தரும் செய்தி பற்றி ஒரு குறிப்பு: நகரத்தின் சீரழிவு கண்டு அங்கு வாழ முடியாததால் மீண்டும் கிராமத்துக்கே மீள்வதுதான் அச்சீரழிவிலிருந்து மீள்வதற்கான மார்க்கமா என்று சிலருக்குக் கேட்கத் தோன்றும். ஆனுல் உண்மை அதுவன்று. நகர்ப்புறச் சீரழிவைக் கண்டு பக்குவமற்று ஒதுங்கியவன் சேகர்தானே தவிர சாரதா அல்ல. அதைத்தான் சேகர் நகரில் நடமாட முடியாமல் காரில் மோதுவதானது குறியீடாகக் காட்டுகிறது. வியச்சாரம், கொலை, களவு, போன்றன நிகழும் நகர்ப்புறத்தில் தன் மனைவியையும் அவ்விதமே அவன் காணுகிருன். ஆனுல் அத்தனைக்கும் மனச் சமநிலை வழுவாத சாரதா கிராமத்துக்கு மீண்டதும் அவனுக்கு அந்தக் கைய சம நிலைப் பார்வையைக் கொடுக்கிருள். அதுதான் கன்தாலவம் எனும் குறியீடு. அதிலும் சாரதா தவறிப்போன ஒருத்தியின் மகளாக இருப்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. காந்தியப்பார்வையை-கிராம அடிப்படையிலிருந்து அதே நேரம் நகர்ப்புற வளர்ச்சியையும் ஏற்று அதன் சீரழிவுகளையும் தாண்டிவளர மனத்தள நிலையை உயர்த்த வேண்டும் எனும் புதிய பார்வை—தவறிப்போனவளின் மகளை வைத்தே விளக்கிக் காட்டிய 'தாகம்' சமுதாயப் பிரச்சினை எனும் தாகத்தை தீர்க்கும் மருந்தையும் தன்னுள் கொண்டுள்ளது. ஆனுல், பாவம் எமது தமிழர்கள்—காந்திய. சத்தியாக்கிரகம், போராட்டம் என்றெல்லாம் குழறும் நம்மவர்கள், காந்திய அடிப்படையில் பிரச்சினையை அலசிய 'தாகம்' திரைப்படத்தைப் பற்றி தியேட்டரை விட்டு வெளி வந்ததும், ஏன் உள்ளிருந்தும் கூட தெரிவித்த மட்டரகமான அபிப்பிராயங்களைப்பற்றி என்னவென்று சொல்வது? இவர்கள் எவ்வளவு காலந்தான் 'விசிலடிச்சான் குஞ்சுகளாக இருக்கப்போகிருர்கள் பார்ப்போம். இவர்களுக்கும் கண்தானம் செய்ய யாரேனும் முன்வருவார்களாயின்—இவர்களது ரசனையை மேம்படுத்த—அது, சமது விடிவு காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்

இந்த நாட்டின் ஏழைத்தொழிலாள விவசாயிகளின் மேன்மைக்காக இலக்கியம் படைக்கின்றோம் என்றும், ஒடுக்கப்பட்ட மக்களே உங்களருகே நாங்கள் என்று உரக்கப் பாடுவோர்களும், ''என்னுலக ஏழைத் தொழிலாளர்கள், விவசாயிகள்'' என்றெல்லாம் எழுதுபவர்கள் இந்த ஏழைத் தொழிலாளர் விவசாயிகள் பற்றி எழுதிய புத்தக வெளியீட்டு விழாக்களை, உழைக்கும் மக்களின் உழைப்பை சுரண்டுகின்ற பட்டம், பதவி பெற்ற கனவான்களை-இலக்கியம் என்றால் எதுவென்றே புரியாதவர்களைக் கொண்டு கோலாகலமாக நடத்தி வருகிறார்கள். இதே கைங்கரியம் தமிழகத்தில்; 'மானுடம் பாடும் வானம் பாடிக் குழுவினரில் ஒருவரான ப-கங்கை கொண்டானின் 'கூட்டுப்புழு' வெளியீட்டு விழாவிலும் நடை பெற்றது. இவைகளையெல்லாம் ஒன்று சேர ஊன்றி நோக்கும் பொழுது. இவர்கள்எல்லாம் ஏழைத் தொழிலாளர்விவசாயிகளின்மேன்மையை விடதமதுமேன்மையிலேயேஅக்கறைகொண்டவர்கள் என்பது புலனாகும். எழுத்து இலக்கியப் பரப்பில் தமது பெயர் மேன்மையுற வேண்டுமாயின், தொழிலாளர் விவசாயிகள் பற்றி இலக்கியம் படைக்க வேண்டும் என மிக நாசூக்காகதெரிந்து வைத்திருப்பதுடன்எந்தமுதலாளி வர்க்கத்தை எதிர்க்க தமது படைப்புக்களில் தூண்டினார்களோ அந்த, முதலாளி வர்க்கத்துடன் தமது லாபத்தை முன்விட்டு-பணம் பெற-தாம் வரித்துக்கொண்ட சித்தாந்தங்களையே அடைவு வைக்கத்தயாராகவுள்ளார்கள் என்பதையே.இவர்களின்செயல்வலியுறுத்துகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் தடை செய்யப்பட்ட பொழுது கடல்மடை திறந்தாற்போல் கட்சி மாறியவர்கள் போல இவர்களும், துன்பங்கள் வரும் போது உறுதியற்றுப் போய்விடுவார்கள் என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது. ஆம்! இவர்கள்! தாமரைக் குளத்தில் மீன் கொத்தவந்த கொக்குகள் தாம்.

0 0 0

புத்தக வெளியீட்டு விழா, இலக்கியக் கருத்தரங்குகள், என்பனவற்றிற்குகூட்டம் அதிக பட்சம் சேர்வதில்லை என்பதுபலரும் அறிந்த சுசப்பான உண்மை. இதை நிவர்த்தி செய்ய, தொடாத நெஞ்சங்களை தொட்டு விட பலர் முயன்று கொண்டிருக்கும் இவ்வேளையில், யாழ் வளாகத்தின் சில கலாநிதிகளின்முயற்சியால், தொடர் கருத்தரங்கு ஒன்றுநடைபெற்று வருகிறது. 'ஆக்கஇலக்கியத்துக்கும் அறிவியற் துறைகளுக்குமுரியதொடர்புஎன்றதலைப்பிடப்பட்ட மேற்படி கருத்தரங்கிற்கு இலக்கியக்காரர் பலருக்கே அழைப்பு அனுப்பப் படவில்லை. அழைப்பிதழிலும்''வரும்பொழுதுஇத்துண்டுடன் வரவும்'' என்ற வாசகம் சேர்க்கப் பட்டிருந்ததால்ஆர்வமுள்ளபலர் அதில்பங்கு பற்றவும் முடியவில்லை. இதுபற்றி என்ன ரீதியில் அழைப்பு அனுப்பப் படுகிறது என அதற்குப் பொறுப்பான 'அம்மணியிடம்' விசாரித்த பொழுது, suitable ஆன ஆட்களுக்குத்தான்அழைப்பு அனுப்பியதாகபதில் கிடைத்தது.இதுபற்றிஇன்னொருமொழியியற் கலாநிதியிடம்விசாரித்தபொழுது''ஓம்!நாங்கள் நினைத்தவர்களுக்குத்தான்அனுப்புவது'' என எரிந்து விழுந்தாராம், இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இக் கருத்தரங்கை ஒழுங்கு படுத்தியவர்கள் சார்ந்த இயக்கத்தைச் சேர்ந்தசிலருக்கும், அழைப்பு அனுப்பப் படவில்லையாம்இவர்களும்suitable இல்லையோ என்னவோ... ''நூறு பூக்கள் மலரட்டும்'' என்ற மகத்தான தலைவரின் சீடர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள், எத்தனை பூக்களை மலரவிடப் போகிறார்களோ...!

—மு. புஷ்பராஜன்

'அலை' இலக்கியவட்டத்தினருக்காக 'அலை'யின் சாதனங்களுடன், யாழ்ப்பாணம் வஸ்ரியன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு இல. 6, மத்திய மேற்குத் தெரு, குருநகரில் வசிக்கும் அ. ஜெயசீலனால் வெளியிடப்பட்டது. நிர்வாக ஆசிரியர் அ. யேசுராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org